பதிவு நம்பர் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று

வருட சந்தா முன் பணம் ...		ரூ 3—0
6 மாத சந்தா ,,	...	ரூ 1–12
வெளி நாட்டிற்கு ,,	...	ரூ 4–0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ.	12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ.	2.

☞ தனி விகிதமும் உண்டு.

இதழ் 3	ஈரோடு, பிரபவ வருஷம் வைகாசி-மீ 9உ (22—5—27) ஞாயிற்றுக்கிழமை.	மலர் 4.

மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.



☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒருவேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த்தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— **மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)** தந்திவிலாசம்:— "Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.

Best copy available.

ஜாதிப் பான்மை.

இது நமது பாரத நாட்டில் மட்டும் பரவி நமது சமூகத்தினர்க்கே ஒருடன்பிறந்த நோய்க்கும் அதிகமாகவே நமது மக்களைத் துன்புறுத்தி வருகிறதென்பதை யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். ஆனால் ஜாதிப் பான்மையானது தொழில்களுக்கா? பிறப்புகளுக்கா? வென்பதை மட்டில் பொதுவாக கவனித்துப்பார்த்தால் மேற்கண்ட இன்னலுக்கு இடமிராதென்றே கொள்ளத்தகுந்ததாகும். எப்படியெனின், ஒவ்வொரு மனிதனது குடும்பத்தில் உள்ள மனிதர்களின் மனப்பான்மை கவனிக்குங் காலத்தில் ஒருவருக்குள்ள மனப்பான்மை மற்றொருவருக்கிருப்பதாக நாம் காண்கிறதில்லை. அப்பொழுது அவர்களின் நடத்தைகள் மாறுபடுகின்றன. எப்படியெனின் ஒருவனுக்கு சரீரப் பிரயாசையால் மற்றொருவருக்கு ஏவல் பணி செய்து உத்யோக வாயிலாக ஜீவிக்க நினைப்பு. மற்றொருவனுக்குப் பண்டங்களை மாற்றி ஜீவிக்க நினைப்பு. மற்றொருவனுக்கு நாடுகளைப் பிடித்து நாட்டார்க்கு யாதொரு தீங்கும் வாரமல் காத்து. அத்தால் பிழைக்கத் தோன்றுகிறது. மற்றொருவருக்கு கடவுள் விஷயமாக விசாரித்து அதன் நிலைமையையும் அதற்கெதிர்த்தட்டான விஷயங்களின் நிலைமையையும் தெரிந்து விடவேண்டியவைகளை விட்டு பற்றவேண்டியவைகளைப்பற்றி யொழுகவும் அதைத் தம் போலியர்களுக்கு மறிவிக்கவும் அவர்களுக்கும் அது உதவுமாறு துணைபுரிந்து வாழ்வதில் எண்ணங்கொண்டவர்களாகவும் இருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இப்படிப் பார்க்கிறபோது இவர்களது மனங்கள் தான் பேதப்பட்டிருக்கிறதே ஒழிய பிறப்பில் எப்படி பேதப்பட்டு காணவில்லையோ அப்படியே நாம் ஒவ்வொருவரும் ஒரு உலகக் குடும்பத்தில் ஒப்புயர்வற்ற ஒரே ஒரு ஜகத் காரண வஸ்துவாகிய நமதருள்பெருங் கடலாகிய கடவுளிடத்துண்டாகிய மானிடரென்னும் ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்றுதான் கொள்வதற்கு ஆதாரமிருக்கிறதேயொழிய தாத்காலிக சுயாலங்கருதிய வேறுபாட்டுகளை கல்பிக்கும் ஜாதிகளுக்கும் அதுகளாலேற்படும் உயர்வு தாழ்வுகளுக்கும் எதுவில்லை என்பது நன்கு புலப்படும். இதற்கு ஆதாரமென்னவெனில் சுருதி, யுக்தி, அனுபவம் என்பவைகளே. இவைகளில் சுருதி என்பது ச்ரோத்திரத்தாலறியப்படுவது. சுரோத்திரமென்றால் காது எனப்படும். ஆக காதினால் கேட்கப்படும் பொருள்களைத்தான் சுருதி என்று சொல்லப்பட்டு வருகிறது. இதைத்தான் வேதம் என்று சொல்லப்படுகிறது. வேதம் என்றால் அறியப்படுகிறது என்று பொருள். எதையென்றால் மனித வாழ்க்கைக்கு அனுகூலமான விஷயங்களை எல்லாம் என்பதாகக் கருதப்படுகிறது. இது இக்கலியில் மனிதக் கூட்டங்களுக்கு என்பதை மனித வர்க்கத்தில் ஒரு சிறு கூட்டத்திற்கென்றே வழங்கி வந்துவிட்டதால் அதன் அருமை பெருமைகளை அச்சிறிய கூட்டத்திற்கே திகட்டி அது அவர்களுக்கும் பிரயோசனத்தைத் தாரமற் போய்விட்டது. இதிம்மட்டோடு நிற்க எடுத்துக்கொண்டதை ஆராய்வோம். அப்படிப்பட்ட வேதத்தைத்தான் சுருதி என்டதென்று சொன்னோம். இரண்டாவதாக யுக்தி என்றோம் மனிதனது அறிவினின்றும் தோன்றுவது. மூன்றாவதான அநுபவமென்பது. மனிதரது பழக்க வழக்கங்களுக்குக் கெடுதலில்லாமலிருப்பது எதுவோ அது அநுபவத்திற் சிறந்தது. அநுபவிக்க யோக்கியமானதென்று சொல்வாருமுளர். ஆகிய இந்த மூன்றுவகையான பொருள்களுக்கும் விரோதமில்லா திருக்குமவைகளையே ஆதாரமாகக் காட்டுவாம். முதலில் சுருதியைக்கொண்டு கவனிப்போம். சுருதிகளில் கடவுளானவர் லோகத்தில் பிராணிகளைக் காப்பாற்றும்பொருட்டு தமது சக்திகளால் ஐந்துவிதமாக விளங்குகிறார் என்பது. நூல்களினுடையவும் நூலறிஞர்களினுடையவும் கொள்கை. காப்பாற்றுவதென்றால் சிறியதைப் பெரியது துன்புறுத்தாது காத்தல் என்றும் வெறுப்பை நீக்கி விருப்பத்தைத் தருவதென்றும் இருவிதம். இவ்விருவிதமும் அனுபவத்திலும் பொருளிலும் அனேகமாக ஒன்று படக் கலந்து கொள்ளுவாதலாவிதுகளைப்பற்றி இதுவேபோருமெனநினைத்து இனி எடுத்து கொண்ட விஷயத்தை நிகழ்த்துவாம் கடவுளின் ஐந்து ஸ்வரூபம் எவை என்னில் பாத்வம், வியூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்பவைகளாம்.

இதில் பாத்வம் என்பது பரமபதத்தில் நிகரற்று விளங்கும் சுத்த சத்வஸ்வரூபம் இந்த ஸ்வரூபத்தில் முத்தியடைந்தவர்களுக்கு ஆனந்தத்தை விளைவித்துக்கொடுத்துக் கொண்டு முத்தர்கள் எந்தச்சாதி என்று சொல்லபபடுபவராயினும் எந்தப்ராணியாகிலும் முத்தியடைந்தால் போதும் அவர்களுக்கு யாதொரு வித்தியாமன்னியில் சுகமனுபவிக்கச் செய்வதென்ற கொள்கைதான்சொல்லப்பட்டு வருகிறதே ஒழிய வித்தியாசத்தைக் கோடுப்பதாக எந்த நூல்களிலும் காண்பதர்க்கில்லை.

2. இரண்டாவது வியூஹம், என்று சொல்லப்படுகிறவிடத்தில் ப்ராணிகளின் சுகதுக்கங்களைக் கவனித்துக் கொண்டு யாருக்கு என்ன கெடுதி யாரால் உண்டாகப் போகிறதோ? யார் யெந்தச் சமயத்தில் தம்முடைய உதவியைக்கோருவார்களோ அவர்களுக்கு உதவும் பொருட்டும் அவர் முறைக் கேழ்ப்பதன் பொருட்டும் உலகரக்ஷயின் பொருட்டும் பாலாழியில் அறிதுயில்கொண்டிருக்கும் ஒரு நிலைக்கு வியூகமெனப்படும் இதினிடத்தாவது இன்னாருடைய துன்பத்துக்கென்றாவது இன்னாருடைய வேண்டுகோளுக்காகமட்டுந்தானென்றாவது இல்லாமல் யெல்லோருக்கும் ஒன்று போலவே என்றேர்ப்பட்டிருப்பதாலிதனிடத்தாவது ஒரு பேதத்தையும் கண்டிலோம்.

3. இனி மூன்றாவதான விபவம் என்பதை எடுத்துத் கொண்டால் விபவமென்பது உலகத்தில் பெரிது சிறிது என்னும் அநீதிகளாலேற்படும் துன்பங்களை நீக்கி சமம் என்னும் தர்ம்மத்தை நிலை நாட்டுவதற்கு அவதரிக்கும் ராமக்கிருஷ்ணாதியவதாரங்களை விபவமென்று சொல்வது, நீதியையும் சமரசத்தையும் ஸ்தாபிக்க வந்த அவதாரங்களிலாவது ஜாதி பேதத்திற்காவது ஆதாரமிருக்கிறதாவென்றால் மானிட ஜாதியிலும் திர்யக் ஜாதியிலும் தாவர ஜாதியிலும் பிறந்ததாகச் சொல்லப்பட்டிருப்பதால் ஒன்றையும் உயர்வு தாழ்வு என்று சொல்ல இயலுவதில்லை. ஆனால் ஒன்றுமட்டில் நிதர்சனமாகத் தெரிகிறதென்னவென்றால், மனிதனானாலும் மிருகமானாலும் தாவரமானாலும் பேதம் கொள்ளாதே எதில் உனக்கு நன்மை விளங்குகிறதோ அதை யெல்லாம் நீகைக் கொண்டொழுகக்கடவை என்று வாயாரசொல்லியும் அவயங்களால் நடத்தியும் காட்டியும் மிருக்கிறதே ஒழிய வேறில்லை.

4. நான்காவதான அந்தர்யாமித்வம் என்பது உலகத்திலிருக்கிற எல்லாப்பொருள்களிலும் உள்ளும் புறம்புமாக வியாபித்து இருக்கும் நிலை. இதனிடத்திலாவது எம்பெருமானுக்கு இன்னவிடத்திற்றான் இருக்கலாம் இன்னவிடத்திற்று இருக்ககூடாதென்ற பேதமாவதுண்டாவெனில் அப்படிக்கு ஒரு சிறிய அணுவினுங்கூட தன்னிருப்பு இல்லை என்பதற்கில்லாம் எங்கும் நிறைந்த பொருளாகக் காணப்படுகிறது. இதற்குசாட்சியாக ப்ரஹ்லாதாழ்வார் வசனமே சான்ருகும்.

5. இனி ஐந்தாவதான அர்ச்சாவதாரமென்றால் ப்ராணிகள் பூசிப்பதர்க்கு யேதுவாக விக்ரஹரூபமாகவும் சித்திரரூபமாகவும் எழுந்தருளியிருக்கும் நிலை, இதில் எந்தச்சாதிகளும் பொதுவாக, பேதமன்னியில் ஆராதிக்கவும் ஆள் கொள்ளவும் உபயோகமாம்படியாக விருக்கிறது. உதாரணமாக திருவரங்கத்தில் பஞ்சமரென்று சொல்லப்படுபவர்களில் ஒரு பெரியாராகிய திருப்பாணரை ஜாதியில் தாழ்ந்தவரென்றும் தீண்டப்படாதவரென்றும் பக்கத்தில் நிற்கக்கூடாதவரென்றும் நினைத்த குற்றம் செய்த லோகசாரங்க முனியென்பவாகிய உயர் ஜாதியிற் பிறந்தோமென்று சொல்பவரையே தன் தோளின் மீது சுமந்து அணிபரங்கன் சந்நிதி முன்பு கொண்டு வந்துவிடும்படிகட்டளையிட்டதாகவும் அவரப்படியே தம்தோளின்மீதுஎற்றுவித்துச் சுமந்து நாட்டாரறிய வீதி வழியாகக்கொண்டுவந்துசன்னிதி முன்புவிட்டாராம். அப்படி இந்த முனியைவாஹனமாகவுடைய ஆழ்வாரை எம்பெருமான் உலகறிய அங்கீகரித்தருளியதாகவும் காணப்படுகிறது. இப்படிப்பட்டக்ஷேத்ரமாகிய திருவரங்கத்தை கோவிலென்று வைணவர்கள் அழைப்பார்கள் வைணவர்களுக்கு நமது பரதக்கண்டத்தில் ஆழ்வார்களால் பாடப்பெற்ற 108 திருப்பதிகளிற் சிறந்த பூலோக வைகுண்டமெனச் சொல்லப்படுவதாகிற ஸ்ரீரங்கமே இப்படிப்பட்ட பேதாபேதங்களை ஒழித்து நடத்தையிலும் காட்டிற்றென்றால் மற்றைய க்ஷேத்திரங்களைப்பற்றி கேழ்பானேன். ஆயினும் இன்னும் சில உதாரணங்களையும் காட்டுவாம். அவையாவன வைணவதிவ்ய தேசங்களை 108 என்பது. அவைகளிற் சிறந்தவைகள் நான்கென்பது தெறிந்த விஷயமாயினும் நான்கில் ஒன்றாகிய திருவரங்கத்தைக்குறித்தவைகளை முன்னமேயே சொல்லப்பட்டதாகையால் ஏனையமூன்றுகளாகிற திருமலை, பெருமாள் கோவில், திருநாராயணபுரம், என்பவைகளாம். இவைகளில் திருமலை என்பது திருப்பதியைச் சொல்வது. இவ்விடத்தில் பெருமாளுக்கு ஒரு குயவனிடபக்தியில் அதிகமாக உகந்திருந்தால் அப்பெருமாணுக்குஒரு அரசன் சொர்னத்தால் செய்து சமர்ப்பித்து வந்த புஷ்பபத்தைப்பார்க்கிலும் குயவரென்று தாழ்த்திச்சொல்லப்படுபவராகிய குறும்பறுத்த நம்பி, என்பாருடைய கால்களில் மிதி பட்டு காலில் ஒட்டிக்கொண்டிருக்கிற களிமண்ணை யெல்லாம் தம்முடைய வேலை முடிவிலெடுத்து ஓர் புஷ்பமாகச் செய்து, இது பெருமானுக்கு என்று நினைத்து தானிருந்த விடத்திலேயே போட்டு விடுவானும். இது பெருமானுக்கு தமது முடியில் ஒரு தங்கத்தால் செய்த புஷ்பத்திற்றுமணமும் இருந்து விட்டால் எப்படி பிரியமாக அங்கீகரிப்பாரோ அப்படியே அங்கீகரித்தும் அரசனது சொர்னபுஷ்பத்தை வெறுத்தும் வந்ததாகவும் கடைசியாக குறும் பறுத்த நம்பியை ஆள்க்கொண்டதாகவும், மூன்றாவதான பெருமாள் கோவிலென்று சொல்லப்படுவதை காஞ்சி புரமென்பதின் பெயராகும் அந்த க்ஷேத்திரத்திலே திருக்கச்சி நம்பிகள் என்கிற செட்டி ஜாதியாரென்போரிடத்தில் பெருமாளுக்கிருந்த உகப்புயாரிடத்திலுமிலலை என்பதாக அறிந்து கொண்ட நமது வைணவ மதத்தை யுத்தாரம் செய்துயெல்லோரையும் ஒன்றபட யுய்விக்கக்கருதித் தக்கபடி முயன்றவரான ராமனுஜாசாரியரும் கூட இப்பெரியாராகிய திருக்கச்சி நம்பிகளின் போனகம் செய்தமிச்சத்தை இச்சித்தாரென்பது உயர்ந்தோரேனப்படுபவர் செய்த நூல்களியே காணப்படுகிறது. நான்காவதான திருநாரயண புரம் என்கிற க்ஷேத்திரத்திலோ இன்றைக்கும் பஞ்சமரென்றும் தாழ்த்த பட்டவர்கள் கோவில்களிலும் அந்த க்ஷேத்திரத்திற்கு தகுதியான ஏற்றத்தையுடைய புஷ்கரணியென்று சொல்லுகிற

இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

அவியல்.

௨-வது பாகம்.

(கைவல்யசாமியார் எழுதுவது.)

வசந்தன்.—என்னருமை நண்பனே! பிராமணன் என்றால் யார்? பிராமணன் என்னும் பெயர் எப்படி வந்தது? பிராமணன் பிர்மத்தின் முகத்திலிருந்து உற்பவித்தான் என்று சொல்லப்படுகிறதே? என்னும் என் சங்கைக்கு தெளிவாகவும் என் புத்தியில் படும்படியாகவும் உள்ளது உள்ளபடி ஞாயமாகவும் புத்திமான்கள் ஒத்துக்கொள்ளும்படியாகவும் விபரப்படுத்தி கூறுவாயாக.

சந்திரன்:—என் அன்பான நண்பா! சாஸ்திர நிச்சயத்தின் உண்மையையும், புத்திக்கு ஒத்த தெளிவையும், புத்திமான்கள் ஒத்துக்கொள்ளும்படியாயும் உன் சங்கைக்குப் பதில் சொல்லுகிறேன். நீ உன் மனதைப் பொறுப்படுத்திப் பதிலின் உண்மைகளை உன் தெளிந்த புத்திக்குக் கொண்டுவருவாயாக. வேதங்கள் ருக், யஜுஸ், ஸாம, அதர்வணமென நான்கு என்றும் ஒவ்வொரு வேதத்திலும் ஸம்ஹிதை அல்லது மந்திரங்கள், பிராமணங்கள், உபநிஷத்துகள் என மூன்று உட்பிரிவுகள் உண்டென்று உனக்குத் தெரியும். வேதங்களின் உட்பிரிவாகிய ஸம்ஹிதையானது அநேகவித வைதீக கர்மங்களில் உபயோகப்படும்படியான மந்திரங்களை அடக்கியுள்ளது. இவைகளின் பொருள் விளங்கும்படி மனனம் செய்து மோக்ஷவிஷயஞானத்தை ஒருவன் அடையவேண்டுமாதலின் இவைகளுக்கு மந்திரங்களென்று பெயர் உண்டாயிற்று. யாகாதிக் ருதுக்களிலும் யாகத்தில் சோமரசத்தைப் பிழியுங்காலத்தும் இதை ஆகுதி செய்யுங்காலத்தும் நெய் ஆகுதி செய்யுங்காலத்தும் சமயங்களுக்குத் தக்கபடி இம்மந்திரங்கள் உபயோகப்பட்டு வரவேண்டியவை, இந்த மந்திரங்கள்தான் வேதங்கள். வேதத்தின் வியாக்கியான நிலைமையில் வேதத்தின் முக்கிய பாகத்திற்குப் பிராமணங்கள் என்று பெயர், ஒவ்வொரு வேதத்திலும் அநேக பிராமணங்கள், காண்டங்களாகவும், சாகைகளாகவும், அத்தியாயங்களாகவும் வகுக்கப்பட்டு, அநேக உபநிஷத்துக்களையும் அடக்கிக்கொண்டிருக்கிறது. பிராமணங்கள் யாகங்கள் நடத்தவேண்டிய விதத்தையும், வேதங்களில் காணப்படும் அரும்பதங்கள் சூத்திரங்கள் மந்திரங்கள் ஆகிய இவைகளின் விசேடப் பொருள்களையும் இன்ன கர்மத்தில் இன்ன மந்திரங்கள் சொல்லவேண்டும் என்பதையும், எஜமானுக்கு ஒருவித கர்மத்தால் வரும் சிறப்பையும், வேறோர்வித கர்மத்தால் வரும் இழிவையும், இவைகளை விளக்குவதற்குத் தகுந்த முன்னோர்கள் கதைகளையும் சொல்லுவது. (எஜமான் என்பது யாகம் செய்வதற்குப் பொருள் கொடுத்து நடத்துகிறவன்) வேதங்களுக்குப் பிர்மம் என்று ஒரு பெயருண்டு. இதனால் வியாக்கியான ரூபமான பாகங்களுக்குப் பிராமணங்கள் என்று பெயர். இதை ஞாபகத்தில் வைத்துக்கொள். பிராமணங்கள் விதிகள், அர்த்தவாதங்கள் என இருவகைப்படும். யாக சம்பந்தமான கோட்பாடுகளே விதிகள். இந்த விதிப்படி நடப்பதால் உண்டாகும் நன்மையும், இப்படி நடவாமலிருந்தால் உண்டாகும் தீமையும், விஸ்தரித்துக் கூறுவது அர்த்தவாதம். பிராமணங்களுடைய இறுதியில் வேதங்களது முக்கிய பாகங்களாகிய ஆரணியங்கள் காணப்படும். இவைகளுள்தான் சிறந்த உபநிஷத்துகள் அடங்கியிருக்கின்றன. ஆரண்யகம், என்ற பதத்திற்கு காட்டில் இயற்றப்பட்ட நூல் என்பது பொருள். யாகாதி கர்மங்களை விட்டு வனஞ்சென்று தமது காலத்தை தவசில் கழிக்கும் துறவுடையோருக்கே இவைகள் தகுந்த நூல்கள். இவைகளுள் அடங்கியிருக்கும் விஷயம் மிகச் சிறந்தவையாதலால் இவைகளை குருசிஷ்யனுக்கு ஏகாந்தமான வனத்தில் உபதேசம் பண்ணவேண்டுமே யொழிய லௌகிகம் நிறைந்த இடத்தில் செய்யக்கூடாது என்பது ஏற்பாடு. சூத்திரனுக்கு வேதம் சொல்லக்கூடாது என்று சொன்ன இடமிதுவே. சூத்திரனென்றால் முட்டாள் என்பது இந்த அர்த்தம். முக்கிய பிராமணங்கள் உபநிஷத்துக்களையும் யாகாதி கர்மங்களையும் அடக்கியுள்ளது என்பதை உனக்குத் தெரிவித்துவிட்டேன். இந்த யாகாதி கர்மங்களை சரியாகத் தெரிந்து நடத்திவைக்கிறவனுக்குப் பிராமணன் என்று பெயர். ஆரண்ய பாகங்களைத் தெரிந்து உபதேசம் பெற்று ஞானத்தோடு விளங்குகிறவனையே பிரமஞான முடையவன் பிராமணன் என்று சொல்லுவது பொருள். இடம் காலம் குணம் தொழில் முதலியவைகளை ஒட்டிப் பெயர் வருவது போல் வேதத்தின் ஒரு பகுதியான பிராமணங்களிலுள்ள யாகாதி கர்மங்களைப் படித்து அதை நடத்திவந்ததினால் பிராமணனென்றும் வேதத்தைத் தெரிந்ததினால் வேதியனென்றும் வேதத்தைப் பழுதறப் பார்த்ததினால் பார்ப்பனனென்றும் எல்லாரிடத்தும் கருணையோடு இருந்ததினால் அந்தணனென்றும் பெயர்கள் வந்தன.

பிர்மாவின் முகத்திலிருந்து பிராமணன் பிறந்தான் என்று சொல்லப்படுகிறதே என்னுமிரண்டாவது கேள்விக்குப் பதில் கவனிப்போம். ருக் யஜுஸ் ஸாமம் இம்மூன்று வேதங்களையே வேதங்கள் என்று கூறுவது. இதில் நான்கு வருணமில்லை. நான்காவதாகிய அதர்வண வேதத்தில் மூன்று வேதங்களிலுள்ள மந்திரங்களும் யோகசித்திக்கு வேண்டிய மந்திரங்களும் பரப்பிர்மத்தின் ஸ்வரூபத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் உபநிஷத்துக்களில் முக்கியமானவை இவ்வேதத்தில் சேர்ந்தவைகளாகையால் இந்த அதர்வண வேதத்திற்கு பிர்மவேதமென்று பெயர். யாகத்தைப்பண்ணுகிறவனான எஜமான் நான்கு பெயர்களை ஏற்படுத்தி யாகத்தை நடத்துகிறான். அக்கினியால் ஆகுதி கொடுப்பவனுக்கு ஹோதா, வென்றும் யாகத்திரவியம் முதலியவைகளை மேல்பார்வைபார்க்கிறவனுக்கு அத்வர்யூ, வென்றும் ஓர் ஆகுதியை வாங்க வந்திருக்கும்தேவதையை கான மூலமாகத் துதிப்பவருக்கு உத்காதா என்றும், முற் கூறியமூன்றுபெயரது வேலைகளை மேல்பார்வைபார்ப்பவனுக்கு பிர்மாவென்று பெயர். வேதங்களுக்கு பிர்மாவென்று பெயர். யாகங்களை நடத்துகிறவனுக்கும் பிர்மாவென்று பெயர் பரபிர்மமான சாட்சாத் பகவானுக்கும்பிர்மமென்று பெயர். உலகத்திற்கும் பிர்மமென்று பெயர் இவ்விஷயங்களில் எவன் முதன்மையான அறிவையடைந்திருக்கிறானோ அவனுக்கு பிராமணன் என்று பெயர். ஒரு கூட்டத்தில் அறிவோடு கூடி விளங்கும் தலைவனுக்கு அக்கூட்டத்திற்குத் தலையாக விளங்குகிறான். அக்கூட்டத்திற்கு அவன் முகம் என்பது போல உலகத்தில் அறிவுடையவன், பிர்மத்தைத் தெரிந்தவன், வேதத்தை உணர்ந்தவன், யாகங்களை முன்னின்று நடத்துகிறவன் இவர்களெல்லாம் பிர்மத்தின் முகத்திலிருந்து வந்தவர்களென்று சொல்லப்பட்டது. முகமென்பதற்கே வேதமென்று பெயரிருக்கிறது. வேதம் தெரிந்ததினால் பிர்மத்தின் முகத்திலிருந்து பிராமணன்பிறந்தான் என்பது வழமை. பிர்மமென்னும் சமபாத கண்டத்தில் அறிவாளியாக விருந்தவனை பிராமணனென்றும், அறிவிற்கு பிரதானம் தலையானதால் பிர்மத்தின் முகத்திலிருந்து வந்தவனென்றும்பலத்திற்கு குறிப்புதோள் ஆனதால் பிர்மத்தின் தோளிலிருந்து க்ஷத்திரியன் தோன்றினானென்றும், ஆகாரமே முக்கியமானதால் அதைச் சேகரித்துக் கொடுப்பவன் வைசியனை பிர்மத்தின் வயற்றிலிருந்து வந்தானென்றும், ஓடித்திரிந்து எல்லாவேலையுஞ் செய்ய வேண்டியிருந்தபடியால் பிர்மத்தின் காலிருந்து சூத்திரன் பிறந்தானென்று சொல்லப்பட்டதே ஒழிய, பிர்மாவின் முகம்தோள், வயறு, பாதம், இன்னுங்கிலும் மனிதனைப் பிறக்கச்செய்யும் கருவிகளிருந்ததில்லை. பிர்மாவின் நாலு இடத்திலிருந்து நாலுவர்ண முண்டாயிற்று இப்பொழுது நாலாயிரவர்ணங்களும் பெண்களும் மேல் நாட்டாரும் எங்கிருந்து பிறந்தார்கள் என்னும் கேள்விகளுக்கு பதில் சொல்லுவது கஷ்டம். அநேக பார்ப்பார்கள் "நாங்கள் முகத்திலிருந்து பிறந்தோம்" என்று சொல்லுகிறார்கள். அவர்கட்கு படிப்பு என்பதே தெரியாது. அவர்கள்கூட பிராமணனுக்கு ஏற்பட்டமரியாதையை வேண்டுகிறார்கள். இந்த இடத்தில்தான் "குடி அரசு" குற்றம் சொல்லுகிறது.

வசந்தன் நீ சொன்னதைக் கவனத்தோடு கேட்டேன். நம் நாட்டின் வருணாசிரமக்கிரமமானது சகல மானிடவர்க்கத்தையும் ஆதரவுடன் படிப்படியாய் மேலான மார்க்கத்தில் நடத்தி, நிர்வைரம், சாந்தம், ஸ்திரத்தன்மை, பரிசுத்தம், தெய்வபக்தி, தியானம் முதலிய, சிலகுணங்கள் வாய்ந்த உத்தம வாழ்க்கையில் நிலையுறச் செய்வதற்கேற்பட்ட சிறந்த சாதனமாம். அப்படியிருக்க வருணாசிரமதர்மத்தில் குறைகூறுவதும் பிராமணனே வருணாசிரதர்மத்தை உண்டாக்கினான் என்று ஒரு ஜாதியை குறை கூறிக்கொண்டேயிருப்பது உங்கள் குடியாசுக்கு ஞாயமா? (தொடரும்)

கலிகால நூதன பேடனை சால விபரீதப்பேய்கள்.

யாழ்ப்பாணம் E. S. துரை அவர்கள் எழுதியது

கற்ற விவேகிகளென்றுபண்டை பரவணியாய் நின்று நிலவும். எம் திராவிடமக்களே! நீதி கொண்டு வன்மை வென்மை களைந்து உண்மை காண்டற்கே இவ்வியாசம் எழுதப்பாற்றென்றறிக.

எச்சமயத்தாராலும், எத்தேசத்தாராலும், எச்சமூகத்தாராலும், எப்பாஷையினராலும், உச்சி மேல் வைத்துப் பாராட்டி, இது வன்றென்றே சிவலோகமெனப்பாராட்டும், எங்கள் அரும் பெரும் பாரதகண்டத்தில், பேர்ஷியா என்னும் தூரதேசத்தை நீங்கி, வயிறு பிழைக்க முடியாமற் இமயமலையைத்தாண்டி இப்பால் புகுந்து பிச்சை எடுத்தலே தொண்டாகக் கொண்டுழன்ற. ஆரியக் கூட்டத்தார், நம் நாட்டில் நாளடைவில் மெல்ல மெல்ல தங்களைத்தாமே பெரும்பேறாகக் காட்டுவான் வேண்டி ஆதிக்கம், அகந்தை அகங்காரம், முதலிய இயக்கங்கள் களைந்து அவ்வாறு எம்மனோரை நிக்கிரக பரிபாலனத்திற்கிடாகக் கிழடக்கித் தம்மையே மேலாகக்கொணர்ந்து தங்கள் போலி வேதங்களிற்பல்லாயிரம் கட்டுக்காவியங்களையும், இயற்றுவித்து அதை எம்மனோரால் எளிதில் அங்கீகரிக்குமாறு இயக்கி இன்றுவரை பற்பல பேதசூழ்ச்சிசெய்து ஆரவாரம் செய்யாநிற்பர் என்பதே எத்தேசத்தாரும் அறிந்த ஓர் பெரும் விடயமென்றறிக. அது மற்றும் போகாது. பல்லாண்டுகளுக்கு முன் வழக்கில் ஏற்படாது [illegible] இறந்துபட்ட பாடான மொழி [illegible] சமஸ்கிருதத்தில் மானிட இலக்கணவாம்பிற்கு முரண்பட்டப் போர்ந்தகாவியங்களையும், விதிவிலக்குகளையும் அங்ஙனம்படி இதுவே வேதம். இதுவே மோக்ஷம். இதுவேஞானம். என்று எளிதில்மேம்படியும், இவைகளைத் தமது எங்கேனும் மனிதரோ ஆகாது கடவுளே அருளிச்செய்தாரெனவும், அவைகளைத் தேவர்களுக்குச் சமமாய் ஒப்பிட்டுக்காணும் பார்ப்பனருக்கே எல்லா கலங்களும், விதிகளும் உடன் படாய் உண்டென்றும், ஏனையோர்க்குப்படிக்கவோ அல்லது கேட்கவோ விதி இல்லை என்று வற்புறுத்தியும், வாய்ப்பறை முழங்கி பொது மக்களை ஏமாற்றியும், தங்களுக்குத் தொண்டு செய்தற்காகவே பிரமதேவனால் படைக்கப்பெற்றவர்களெனப்பண்டை நாட்தொட்டு இன்றுவரையிலும் மக்களை ஏமாற்றுவதில் நின்றும் நிறுத்தாது-கெற்றி வேர்வைவடியப் பெரும் பாடுபட்டுழன்று வருந்தும வறியோர் தேடும் தேட்டத்தில் ஒரு பாகத்தை பிறப்புத்தொட்டு இறப்புவரையும் ஏற்பாட்டாது அவர்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மீதும் அங்ஙனக்காவிற் [illegible] தொடுத்துத்தொடுத்து அவர்கள் பால் பல்வேறு சடங்குகள் வேண்டியவாறு வகுத்தும் தொகுத்தும் அங்ஙனம் அவர்களைக் கொள்ளைகொண்டும் இங்ஙனம் [illegible] போன பொருள்களைத் [illegible] தங்கள் [illegible] விலாப்புடைக்கத்தின்று கொழுத்து இறுமாந்து காலங்கழித்து வருவதுமின்றி, கேவலமான நூற்றுகளிலும் தேய்ந்து ஆடாத கொடுமைக்கிடாக அதைச் செலவு செய்தும் தம்மைத்தாமே மேலாகப் பேசியும், ஏனையமக்கள் தங்களுக்கு எவ்வித ஆபத்திலும் காப்பாற்றி உதவி செய்வோரையும் விலங்கினங்களாக்கி இழிவு தூக்கி பேசிவருவதைக்கண்ணுறும் எம்மனோரில் பெரியாராயினும் இதைக்கண்டிக்கத் தங்கள் கல்வியினாலும், நுண்ணறிவினாலும், அளவை நூல்களினாலும், எம்மனோரை நாகரீகப்படுத்த முயன்றால், இடியேறு விழுந்தாற் போல் கண்டு ஆரவாரம் கொட்டி அங்ஙனம் முயன்றவர் மீது அழுக்காறு ஒளிகட்டிப் பாழாக்கி விடுவதன்றியில், எதும் தங்களுக்குத்தோன்றுதவாறு போற் பாசாங்கு சாதித்து உள்ளுக்குள்ளாகவே அகமகிழ்ச்சி பூண்டொழுகி வருகின்றபடியின், இந்தியா இலங்கையில் வாழும் இந்துக்கள் தங்கள் சமயத்தில் வாழ்கின்றதற்கு ஏற்ற விதி விலக்கு போதாமையால், அதை நீக்க முடியாது வெறுப்புத் தோன்றி வேறுசமயம் சார்ந்து வரும் எதுவால் நாளடைவில் இந்து சமயகோடிகள் தங்கள்சமயத்தில்மிகக்காண்காது குன்றிக் குன்றி வருவதோடு ஏனைய நாட்டாரிலும் மிகக் கீழ்மையான நிலையிலும் ஈடுபற்றி சீர், சிறப்பு, ஒற்றுமை முதலிய பேறுகள் முளைகொள்ளாது பாழாகிவருவதைக் கண்ணுறும் இக்குறும்பார்ப்பனர் தங்களுக்கு இதில் சிறிதும் பாத்தியமில்லையென்று கண்ணோட்டஞ் செய்து அகமெகவே பூரணமடைந்து வரும் இக்கொடியோர் இமயமலைதொட்டு இலங்கை வரையிலும் பரவி வருவதை ஆர்க்காக்கு காணப்பாற்ற [illegible]

இவ்வாறு, இந்தியமக்களுக்கு பல் விதத்திலும் இடையூறு பாவித்துவரும் இக்குறும் பார்ப்பனக் கூட்டத்தார் மீன், ஆடு, மாடு, கோழி, பறவை, நண்டு, தவக்கை முதலிய விலங்கினங்களின் மாமிசத்தை உணவாகக் கொண்டு புசித்து வரும் வட நாட்டுப்பார்ப்பனரே மாத்திரம் ஆரியத்தைச் சேர்ந்தவரெனப்படுவர். ஏனைய தென்னாட்டிலும் இலங்கையிலும் வாழும் பார்ப்பனரோ. ஆரிய ரெனப்படுதல் ஆகாவாமென்பதே தேற்றம். என்னையெனில், இவர்களெல்லாம் வட நாட்டிலிருந்து வருமைநோயினால் வாட்டமெய்தி நதியோரங்களில் நண்டு, மீன், தவக்கை, ஆடு, மாடு, ஆகாரங்கள் தங்கள் புசிப்புக்குத்தக்கவாறு போதாமையால், அது அங்ஙனம் தாங்காமைக்கிடாக வடநாட்டை விட்டு மெல்ல மெல்லத் தென்திசை நோக்கி ஆறுகளையும் குட்டைகளையும் கடந்து தங்கள் புசிக்கும் மாமிச உணவு உண்போர் முதலாகிய வேடர், குறவர், புலையர், என்னும் வேறு பிரிவினருடன் சிநேகம் பாவனை காட்டி அவர்கள் இல்லத்திற் கலந்து கட்டி உண்டு அளவளாவி வாழும் காலத்தில், அவர்களுக்குள்ளே கலியாணம் காட்சி செய்துவிவாகம் அவர்கள் [illegible] இவர்களுடன் வந்தார்கள். அதில் அடங்கிப் பிறந்தவர்களில், விராமரும், பாசரும் வசிட்டரும் மென்று இதை காண்பிக்கின்றதற்கு பலசரித்திரம் இன்றைக்கும் சான்றாக நின்று கடைப்பிடிக்க ஆனால் அவர்கள் தங்களைத் தாங்களே மேலோரென்றும், பார்ப்பனரென்றும் மிக உயர்த்திப்பேசவேயில்லை. அப்படியவர்கள் கூறுவாராகில் அது கடவுட்தன்மைக்கு முரண்படக்கண்டு வெறுப்பாய் நிற்கும். ஆனால், பின்னேன் வேண்டி தங்களையும் தங்கள் குருபரம்பரையையும் பெரிதாகக்காட்டி கள்ளப்புருடனைக் கொய்யகத்துட் மறைத்தாற் போற் உள்ளத்தை சிறுமைக்கஞ்சிப்போற்றுது. தாங்களே பார்ப்பனரென்று பல இடங்களில் நெருப்பாற்றுக்கு மயிர்ப் பாலமிட்டவாறு போற்தோன்றுகின்றதேயாவாராலும் பெயர்த்தெடுக்கமுடியாத உண்மை என்றறிக இவ்வாறு அவர்கள் தென்னோக்கி வாழும் காலத்தில். திராவிடரென அழைக்கப்படும் தென்னாடுடைய தமிழரோர் மிகச் செல்வத்திலும் நாகரிகத்திலும், குருவில்கம சங்கமபத்திகளிலும் யாவராகிலும் மதிக்கொணாத நிலைமையில் வாழுவதைக் கண்ணுறும் இவ்வகை அன்னிய நாடோடிகள் கண்ணோட்டம் செய்து தாங்களும் இத்தகைய சிறப்பிற்கைக்கொள்ள டொழுகில் தங்கள் வறுமையில் நின்றும் நீங்கி அவர்களினால் அங்ஙனம் நாகரிகமடையலாமெனக் கருதி பழைய இடத்தையும் உற்றாரையும் உறவினரையும் விட்டுநீங்கி மேற் கூறிய சம்மந்த வர்க்கத்தோடுபெற்றெடுத்த புத்திர பாக்கியங்களுடன் ஒழுங்கு சேர்ந்து ஓர் இயல்பாய் திராவிடரிருக்குமிடத்திற்கு நழுவி நழுவி வந்தடைந்துஇவர்களையே தஞ்சமெனக் காட்டி இவர்களின் தொண்டையே மேலாகக்கடைபிடித்து சீவனம் செய்து நன்மையாய் வாழ்ந்து வந்தார்கள். இத்தகைய தொண்டுழியம் செய்து சீவனம் செய்து வருங்காலத்தில் திராவிடரிடங்காணும் நாகரீகங்களில் சிலவற்றை சிறிது சிறிதாக கற்றறிந்து மெல்ல மெல்ல நாகரிகமடைந்து தமிழிலுள்ளவற்றையெல்லாம் ஆரிய மொழியிற்பெயர்த்தெடுத்துக் கொண்டு தமிழ் வேதத்தையும் திராவிடரையும் சிறுமைக்குக் கொண்டுவரத்தூர் வஞ்சக இலக்கமைந்து நாளடைவில் அரசனையும், ஏனையோரையும் சிற்சிலமாயம் வித்தை, மயக்கம் மூலம் சில தந்திரங்களுக்கிடாக என்னென்ன ஆதிக்கம் வேண்டுமோ அது எல்லாவற்றையும் நிறைவறப்பெற்றும், அதை யெல்லோரும் அங்கீகரிக்குமாறு செய்தும், கடைசியில் தமிழின் பெருமையையும் தமிழ் வேதத்தையும் இன்னும் அநேக சாஸ்திரங்களையும், அரசர்களையும் இருந்தவிடந் தெரியாவண்ணம் அழிந்து போகுமாறு செய்தது போதாது, நாட்டையும் ஆங்குள்ள மனிதரையும் கெடுத்து பாழாக்கி வருகின்றனர். இவர்கள் முதல் முதல் தங்கள் சுற்றத்தாராகிய. வேடர், புலையர், குறவர் முதலிய உறவினரைக் கெடுத்தார்கள். இரண்டாவது அண்டின திராவிடரின் பொருளையும் கைப்பற்றிக் கொண்டு அவர்களையே சூத்திராக்கினார்கள். மூன்றாவது தமிழ் வேதம் புராணம் முதலிய அரும் பெரும் நூல்களை தங்கள் பாஷையில் மொழி பெயர்த்துக்கொண்டு. இவைகளை எரியுமபடி செய்தனர். நான்காவது தங்கள் ஆதிக்கம் சூழ்ச்சி முதலிய இயக்கங்களுக்கி

(13ம் பக்கம் பார்க்க.)

பாரிசாதப் பரிமளம்.

"தீண்டத்தகாதார்"

மதுரை திரு. வீ. மு. பொன்னையா.

இறைவன் படைப்பில் 'தீண்டத்தகாதார்' என்றே ஒரு வகுப்பு இருப்பதாக வைதிகர் என்பார் சிலர் கூறிவருகின்றனர். இதற்குப் பொருள் சிறிதுமில்லை. ஆண்டவன் உலகைப்படைக்கும் போழ்தே 'தீண்டத்தகாதார்' என ஒரு வகுப்பாரையும், தீண்டத்தக்கவரென ஒரு வகுப்பாரையும், மக்கட்டொகுதியினருள்ளே வேறு படுத்திப் படைத்தாரா? ஆம் என்று கூறும் பேரறியாமையை என்னென்று இயம்புவல்! ஒரே மக்கட் பகுதியில் பிறப்பினால் வேறுபாடேது? "பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும் ....." என்றன்றோ அறிஞர் கூறிப்போந்தார்? மக்கட்குள்ளே வேறுபாடுளவெனின் அஃது செயல் கருதியதாகவேயிருக்க வேண்டுமன்றிப் பிறப்புக்கருதியதாக விருத்தல் எங்ஙனம் இயலும்? ஒரு குலத்தில் பிறந்தமைக்காக ஒருவர் உயர்வுடையோராகவும், வேறொரு குலத்தில் பிறந்தமைக்காக தாழ்வுடையோராகவும் கொள்ளப் பெறுதல் கொடுமை! கொடுமை!! இழிந்த செயலுடையார் எக்குலத்தில் பிறப்பினும் அவர் "இழிந்தவரே" உயர்ந்த செயலுடைய மக்கள் எக்குலத்தில் பிறப்பினும் அவர் "உயர்ந்தவரே". அவரவர் குணஞ்செயலைப் பொறுத்ததே அவரவர்க்கு உயர்வும் தாழ்வும் மற்றவருடையது தன்னைச் சாராது. இஃது அநுபவத்திற்கும், அறிவுக்கும் ஏற்றற்குரித்து. எனவே, உயர்ந்த தன்மை எவர்பாட்டு உண்டோ அவர் உயர்ந்தவர் என்பதினும், தாழ்ந்த தன்மை எவர் பால் உளவோ அவர் தாழ்ந்தவர் என்பதினும் ஒரு சிறிதும் ஐயமின்று எத்தொழிலை யார் செய்கின்றாரோ அவர் அத்தொழிலுக்கு உரிய சாதியேயாவர். இது தமிழ் நூல் ஆசிரியர்களுள் தலை சிறந்த திருவள்ளுவனார் முதலிய புலவர் மக்கட்கெல்லாம் உடன்பாடு. வடமொழி வேதங்களும் இவ்வாறே சாற்றுகின்றனவென வேதத்தின் கரைகண்ட தயானந்த சரஸ்வதியாகிய சான்றோர் சாற்றுகின்றனர். உலகமறிந்த எந்த நல்லறிஞரும் இதனை மறுக்கக் காணோம். இடைக்காலத்தில் சுயநலங்கொண்ட சிலர் கட்டால் பிறப்பினாற் சாதி யென்றும் பேதைமை வயப்பட்டு விட்டார் இந்திய மக்களுட் பல்லோர், இந்திய சமூகத்துள் ஒரு பெரும் வகுப்பாரைத் 'தீண்டத் தகாதார்' என ஒதுக்கினர். அவர்கள் மாக்களினும் இழிவாக நடாத்தி அப்பெருஞ் சமூகத்தின் அறிவை பயனிலதாக் கீழ்ப்படுத்தி விட்டார் தொடக்கத்தில் தீண்டத்தகாதாரென ஒரு சாராரைத் தள்ளியதற்குக் காரணமில்லாதிருக்க நியாயமில்லை. தீயன புரிந்தோரைத் தீண்டத்தகாதாரென அது போழ்து ஒதுக்கியிருக்கலாம். அவ்வகுப்பாரை இது போழ்தும் அழைக்கும் "பறையர்" "புலையர்" என்ற பெயர்களே வலியுறுத்தும். "பறையர்" என்றால் என்னை? 'பறைசாற்றும் தொழில் புரிவோர்' என்பதே பொருளாகும். புலையர் என்றால் புலைத்தொழில் புரிவோர் என்பது பொருள். அன்னாரே தீண்டத்தகாதாரென இது போழ்து ஒதுக்கப் பட்டுளார். தொழில் காரணமாக அவர் நீக்கப்பட்ட முறைப்படி இப்போழ்து அக்கருமம் ஆற்றுவோர் எவராயினும், அவரைப் புலையர், பறையர் வகுப்புகளிற் சேர்த்து, புலை—பறை தவிர்த்து நல்லவழி யொழுகுவார் யாவராயினும் அவர் ஒழுக்கத்திற்குத் தக்க குலத்தில் அவரைச் சேர்ப்பதினால் நமக்கொரு தடையில்லை. இது காலை அந்த நிலையிலா தீண்டாமை கொள்ளப்படுகிறது? இல்லை; இல்லை. ஒரு குலத்தில் பிறந்தாரெல்லாம் தீண்டத்தகாதாரென வன்றோ ஒதுக்கப்படுகின்றனர், இஃது எத்தகைப் பெருங் கொடுமை? தீண்டாமை குலம்பற்றியதா? குணஞ் செயல் பற்றியதா? என்னை! பேதமை உலகம்! தீண்டத்தகாரென ஒதுக்கப்படும் குலத்தில் மேதக்க ஞானியும் இருக்கின்றனரன்றோ! அவரை எங்ஙனம்—எம்முறையில் தீண்டத்தகாதாரென இயம்பக்கூடும்? மிகமிக உயர்ந்த குலமென்று கூறுமிடத்தில் தீண்டுதற்குச் சிறிதும் தகுதியில்லாத தீயோர் பலர் இருப்பதை யானறிவேன். அன்னாரை உயர்ந்தவர்களென்று யாங்ஙனம் இயம்ப இயலும்? தீண்டத்தகாதாரென ஒதுக்கப்படும் குலத்தில் பிறந்தவர் பல்லோர்; அவருள் ஒருவர் சாமி சகஜாநந்தர். இவர் சீரிய ஒழுக்கமும், சிறந்த குணமும், உயரிய அறிவும் உண்மையுள்ளமும் படைத்தவர். இக்குணநலங்கள் உயர்ந்த குலத்தினர் என்போர் பால் காண்டல் முயற்கொம்பு (ஒரு சிலர் இலைமறை காயெனமிளிர்தல் உண்டுஎன்பதை மறுப்பேனில்லை.) ஈண்டு சகஜாநந்த சுவாமிகள் தீண்டத்தகாதார் என்பது அறிஞர் ஆராய்ச்சிக்குரியதொன்று இவ்வுண்மையை எடுத்துக் காட்டினால் வைதீகர் என்று தங்களை அறியாமையாற் கருதிக்கொண்டிருக்கும் உலக அறிவும, பிறர் நலமும், கருணையுமற்ற அவ் "அவைதீகர்கட்கு மனம் பொறுக்கவில்லை. இது குறித்தே உலகுய்யப் போந்த காந்தியடிகளையும் சில உண்மையறியார் தூற்றி வருகிறார். தீண்டாமை போக்க வேண்டுமென்ற செந்நெறியை உலகிற் குணர்த்தி வருவதற்காக காந்தியடிகள் என்னும் சாந்த குணமலையை, தன்னலப் பேயும், வழக்கப் பிசாசும் பிடித்துத் தலைவிரிகோலமாய் ஆடுவோரில் பலர், பல வேறுவன் சொல் வழங்கிவருகிறார். ஒருவர் கொல்லவேண்டுமென்கிறார்; பிறிதொருவர் வெட்டவேண்டுமென்கிறார்; இன்னொருவர் குழி வெட்டிப் புதைக்கவேண்டுமென்கின்ர்; வேறு சிலர் வாயில் வந்தவாரெல்லாம் வைகிறார். இக்குழுவினரின் அறியாமைக்கும், தன்னலத்திற்கும் சரியான மருந்து பைத்தியகார வைத்தியசாலையிலிருக்கிறது. தீண்டத்தகாதாரென பிறப்பினால் ஒரு வகுப்பு உண்டென விவாதித்து நிலைநிறுத்தும் காலம் மலையேறிப் போய்விட்டது என்பதை அந்த பாழும் வைதிகர் இனிதுணர்வார்களாக. ஒரு வகுப்பாரைத் தீண்டத்தகாதாரெனத் தள்ளி மிதித்து வெறுத்து வந்த காரணத்தினாலேயே, இது போது நம் பாதகண்டம் பிறரால் துன்புறுத்தப்பட்டும் நமது இந்த சமூகங்களுக்குத் தங்கள் எண்ணிக்கையில் குறைந்தும் அன்னிய மதமாகிற கிறிஸ்து, மகம்மதிய மதத்திற்கு சமூக எண்ணிக்கையை விர்த்தி செய்து கொண்டும் வருகிறது என்பதை இனியாதல் உணர்தல் வேண்டும். மக்கள் கூட்டத்துள் ஒரு சாராரை, நல்லறிவும், சுயமதிப்பும் பெற விடாது தடுத்து வந்த பெரும் பழிக்கு விடுதலை தேடிக்கொள்ள இன்னும் பின்வாங்குதல் பெரும் அபாயத்திற்கிடமாகும் என்பதைஉணர்தல் அறிவுடைமை இதனை உணர்ந்தே நான் காந்தியடிகள் இக்கொள்கையை அஞ்சாது வெளியிட்டு நடை முறையில் தீண்டத்தகாதார் என்று ஒரு வகுப்பில்லை என்பதைத் தாம் காட்டவருகிறார். "நாம் விடுதலை பெற வேண்டும்; நமது பிறப்புரிமையைத் தடுக்க எவருக்கும் உரிமையில்லை" என்று கருதும் ஒவ்வொரு இந்தியரும் தீண்டத்தகாதாரென ஒதுக்கப்படும் வகுப்பார் முன்னேற்றத்திற்குப் பாடுபடுதலைத் தமது முதற்கடனாகக் கொள்ளப்பெறல் வேண்டும். தீண்டத்தகாதாரென்று பிறரால் கூறப்படும் வகுப்பாரின் பொருட்டு எத்துணை நலன் ஆற்ற இயலுமோ அத்துணையுமாற்றச் சிறிதும் பின்னடைதல் கூடாது. நமது நாட்டில் நம்மோடு பிறந்த அச்சோதரரின் மனம் புண்படும்படி இனியும் நடந்து கொண்டு போவமேல் அதைவிட அறியாமை வேறொன்றுமில்லை. அன்னார்க்குக் கல்வி, விவசாயம், வணிகம், கைத்தொழில் அறிய சகலமும் கொடுத்து நம்முடன் சேர்க்க வேண்டும். கோவிலுக்குள் செல்ல முழு உரிமையும் தரல் வேண்டும். பிற மதங்களில் சேர்ந்துள்ள நம்மவரையும் மறுபடியும் நம்ம மதத்தில் சேர்த்துகொள்ளுமாறு முயற்சி செய்தல் வேண்டும். இது சாறும் நாம் அவர்களைத் தீண்டாதிருந்தமைக்காக மன்னிப்புப் பெறல் வேண்டும். மகாநாடுகளில் தீர்மானங்கள் செய்து விடுவதாலோ, பத்திரிகைகளில் எழுதிவிடுவதாலோ தீண்டாமைப் போக்கி விடல் அரிது. எல்லாம் செயலில் காட்டவேண்டும்.

எனக்கினிய இளஞ் சகோதரர்களே! சகோதரிகளே!! எழுங்கள்! எழுங்கள்! உங்களாலேயே இச்சீரிய தொண்டைச் செவ்வையாய் ஆற்ற இயலும் என்பதை யானறிவேன். உங்களுடன் பிறந்த அச்சகோதரர்களின் நலங்கருதி ஆற்றும் உங்கள் தொண்டு இறைபணி என்பதை உணர்ந்து சலியா முயற்சி எடுத்து ஊழியஞ் செய்யுங்கள்! அதனால் நீங்கள் கோரிய எல்லா நலங்களும் பெறுவீர்களென்பதிற் சிறிதும் தடையில்லை. உங்களுக்கு வேண்டும் யோசனைகளை யெல்லாம் எளியேன் செப்பத் தயாராயிருக்கின்றேன். உடனே ஓர் சங்கம் காணுங்கள். அன்பர் பணி செய்ய வெனையாளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்று பாடும் அளவில் இன்று இவண் நின்று விடுகிறேன். பிழைபொறுக்க.

திருவாரூரில் திராவிட ரத்தினங்களின் விஜயம்.

திரு. செல்வத்திற்கு விருந்து.

9-5-27 [நமது நிருபர்]

மாயவரம் மகாநாட்டிற்கு சென்றுவிட்டு உயர் திருவாளர்களான A. T. பன்னீர் செல்வம் குமாரசாமி ரெட்டியார் M. L. C. A. ராமசாமி முதலியார், P. T. ராஜன் சிதம்பரநாத முதலியார் M. L. C. சௌந்திரபாண்டிய நாடார் M. L. C. சுப்பரமணிய செட்டியார் தெண்டபாணி பிள்ளை கண்ணப்பர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர். சுரேந்திரநாத் ஆரியா கயாரோகணம்பிள்ளை சர்மிகாங் செட்டியார் முதலியவர்கள் காலை 10-மணிக்கு மோட்டார் மூலியமாய்நகர்க்கு விஜயம் செய்தார்.

ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சகல வீதிகளிலும் வரவேற்புக்களும் கொடிகளும் மகர தோரணங்களும் தலைவர்களை நல்வரவேற்றன.

புகை வண்டி நிலயத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டன. வழி நெடுக தலைவர்கட்கு வரவேற்பு பத்திரங்கள் அளிக்கப்பட்டு ரோஜா ஹாரங்கள் போடப்பட்டது.

விஜயபுரம் ஷேகத் அலிசங்கத்தாராலும் கடை வீதி வர்த்தகர்களாலும், மிக அழகிய பத்திரங்கள் அளிக்கப்பட்டது. மிருந்த குதூகலத்துடனும் என்றுமில்லா காக்ஷியாகவும் ஊர்வலம் பகல் திரு. மாணிக்க முதலியார் பங்களாவுடன் முடிவுற்றது.

விஜயம் செய்த தலைவர்கட்கும் மற்றும் ஜில்லாவின் பலபாகங்களிலுமிருந்து விஜயம் செய்திருந்த யாவர்க்கும் சோமசுந்திரம் செட்டியார் அவர்கள் இல்லத்தில் பகல் விருந்தும் தேசாபிமானி சங்கத்தாரால் மாலை சிற்றுண்டியும் நகராண்மைக்கழகத்தலைவர் கோபால்சாமி முதலியார் இல்லத்தில் இரவு விருந்தும் இனிது நடந்தேறியது விருந்துகள் ஒன்றையொன்று தோற்கடித்ததெனலாம்.

மாலை 4 மணிக்கு ஆயிரக்கணக்கானஜனங்களுகூடிய ஓர் பெருங் கூட்டம் ஹைஸ்கூலுக்கருகில் நடைபெற்றதுபுகைப்படமெடுக்கப்பட்டது திருவாளர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். திராவிட சங்கத்தாராலும், விஸ்வகர்ம சங்கத்தாராலும் ஆதிதிராவிட சங்கத்தாராலும் முறையே A. T. பன்னீர் செல்வம் அவர்கட்கும் குமாரசாமிரெட்டியார் அவர்கட்கும் உபசாரப்பத்திரங்கள் அளிக்கப்பட்டது.

ஒவ்வொரு தலைவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். திரு. செல்வம் அவர்கள் தமக்கு அளித்த விருந்துக்கும் வரவேற்பிற்கும் வந்தனமளித்துவிட்டு எதிர்காலத்தில் நமதியக்கத்திற்கு தாம் செய்யவெண்ணியுள்ளவைகளைப்பற்றி மிக உருக்கமாக உபன்னியசித்தார். இரவு 9-30க்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

இவ்விழாவின் நகராண்மைக்கழகத்தலைவரும் சகல முனிசிபல் அங்கத்தினர்களும் பிரபல வக்கீல் சகல வர்த்தகர்களும் செல்வாக்குள்ள மிராசுதார்களும் தேசீயவுணர்ச்சிமேலிட்ட மாணவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கது. தஞ்சை ஜில்லாவில் நமதியக்கம் பெற்றுள்ள சிறப்பின் விழவாக கூடிய ஜில்லா மகாநாட்டிற்கு திருவாரூர் விருந்து ஒரு விடாயாத்தி உச்சவமாகவே இருந்தது இதில் ஊக்கம் காட்டிய திருவாரூர் வாசிகள் எதிர்காலத்திலும் ஒற்றுமையுடன் வாழ வேண்டுகிறோம், விருந்துகள் யாவும் சமபந்தி போஜனமே யாகும். சகல சமையலும் பிராமணரல்லாதார்களாலேயே தயாரிக்கப் பட்டிருந்தது. வாசித்துகொடுத்த வரவேற்புப் பத்திரங்களில் சிலதை மட்டும் கீழே பிரசுரித்துள்ளோம்.

தஞ்சை ஜில்லா போர்டு தலைவர்
உயர் திருவாளர்
A. T. பன்னீர்ச் செல்வம்
Barister-At-Law அவர்களுக்கு
திருவாரூர் திராவிட சங்கத்தார் (9-5-27)ல்
அளித்த நல்வரவேற்புவிழாவில்
திருவாரூர் சர்க்கிள் விஸ்வகர்ம
மகாஜன சங்கத்தாரால்
சமர்ப்பிக்கப்பெற்ற

வாழ்த்துப் பத்திரம்.

தஞ்சை பாலசோதிடம் T G. கந்தசாமிப் பத்தரவர்களின் குமாரரும் விஸ்வகர்ம சங்கத்தலைவருமான T. K. நடேசாச்சாரியர்ரா லியற்றப்பெற்றது.

சீர்மலி கமலைத் திகழ் திருவாரூர்
பேர்மலி சோழன் பிறந்து முன்னாளில்
ஆவினுரிமைபு மன்புடனளித்தத்
தாயுடைய வன்னைத் தன்றிருமகனை
ஒவியரதக்கா லூற்றிட வோட்டி
மேவிய புகழதை விளக்குவகாலுந்
தேவர்களுந் தொழு தியாகப்பெருமான்
ஜீவர்களுய்யச் செயும்விழா வன்னாள்
ஆதித்திராவிடராம் பறையருக்கு
வோதுவென்குடை முதலுபர் மரியாதைகள்
நிந்திரப்பெயர் புனைந்திலங்கு வகாலுஞ்
சுந்திரமூர்த்தி துதிசெயும் பதிகத்
தாரூர் பிறந்தாரவர்க்கு மியாமடியே
னென்றுமே வழக்கிய இசையுறலாலுந்
தொன்று தொட்டிவ்வூர் சுயமரியாதையின்
குன்றெனமிளிருங்கொள்கையைக்காட்டியுங்
குன்றிய நோக்குடைக் கோஷ்டியர் சுயநலப்
பேராசையினொடு பிறர்தமைத் தாழ்த்தலால்
அழுந்துபர்க் கடலதில் விழுந் திராவிடர்
தங்கட் குறு துணை சங்கமென் றறிந்து
இங்குமோர் திராவிட சங்க மிசைத்தினர்
இச்சங்கத்திலியாமெய்து பன்னலமதில்
அச்சமில் வமைச்சவற் றொளிர் தங்களைக்
காணக்கிடைத்த காக்ஷியொப்பற்றதே
ஆதலாலெங்கள் ளகக்களிப்பளவில்
நீநிலாவாழ் விற்றிகழ்ந்திடு மறிஞர்கள்
தனைநிகுற ஜில்லாத் தலைமை யுடையார்
தண்டமிழ் மக்களின் றனித் துணையுடையார்
வயல்நிறை செல்வ வளங்களுடையார்
வழங்கலால் வள்ளலுரிமை யுடையார்
சுதந்தரமின்றிச் சுழன்றலை மக்களை
இதம்பெற வருளிய இயேசுவின் விழுமிய
புத்தமுதனைய நற்போத மொழிகளை
புத்தமமென் றுணர்ந் தொழுகறிவுடையார்
தம்மதம்மாறாத் தகைமையுடையார்
எம்மதத்தினர்க்கு மினிய நட்புடையார்
புத்தமமென் றுணர்ந் தொழுகறிவுடையார்
தம்மதம் மாறாத் தகைமையுடையார்
எம்மதத்தினர்க்கு மினிய நட்புடையார்
ஆங்கிலத்திற் பாரிஸ்டாட்லா வென்
றோங்கிய வாசியலுயர் வினையுடையார்
உலகினில் மானிடர்க் குரிமையாஞ் சுயமதிப்
பலது வேறெவையுமில்லாதலாலதின் றுணைக்
கல்வியே யதைவளர் கலைநிறைச்சாலையிற்
பல்வகைச் சாதியார் படிப்பதற்கு
குரிமையுண்
டெனமற் றெறி தழைத்திலசத்தவை
நிலவிடத்
தன தகிகாரத் தன்னிழலுடையார்
அயர்வறுஞான வாற்றலுடையார்
அழுக்கா றுடையர்க் கசமதுவுடையார்
உயர் திரு பன்னீர்ச் செல்வமுடையார்
ஒப்பில் நீதியோங்கறிவுடையார்
எனவேபுகழ வழைகளெய்தியெத்
தினம்நீர்வாழத் தெய்வதம் போற்றியே
கவலைவிட்டற நெறிக்கல்வியைப் பெற்றுளம்
உவகை பூத்துரிமைபெற் றோங்கினருல
கினிற்
பெருந்தகையாளனும் பிடினைக்கண்டகம்
வருந்தாகில்வஞ்சகர் வளர்த்த பொய்ச்
சூழ்ச்சியும்
ஒழித்த இச்சான்றிறலுண்மையே நிலை
யெனும்
மொழிகளே யொலிப்பன மூதறிவுடையீர்
எம்மரபினர்க்கும் நீரேற்பவையியந்து
இம்மை மறுமையிலிசையும் நற்புகழொடு
வாழி வாழிபல்லூழி நாளுதன்பினும
வாழிநின்னுடம் வாழிநின் னலங்கள்
வாழி நம் முன்மை மாபெருந் தலைவர்கள்
வாழி திராவிடமான் பொலிர்சங்கமும்
வாழிச்சுய மரியாதையும் வாழியே!

இங்ஙனம் தங்களன்புள்ள,
விஸ்வகர்ம மகாஜன சங்கத்தார்கள்.

திருநெல்வேலி ஜில்லா போர்ட் பிரசிடேண்டு
உயர் திருவாளர்
குமாரசாமி இரட்டியார்
அவர்களுக்கு
திருவாரூர் திராவிட சங்கத்தார் வாசித்தளித்த

நல்வரவேற்புப் பத்திரம்

உலக மளித்த வொருபெருங் கடவுள்
நிலவுலகத்தே யிலகுறு முத்தர்
பலரிடைத் தோன்றும் பண்பறிவுறுத்தக்
குலனுங் குடியுங் குறியா திநித்து
வேயின்ற முத்தர் எனவே விளங்கும்
பொருநை போற்றுந் திருநெல் வேலி
பலரா விழைத்த நலமா தவத்தால்
தந்தை மகிழ்ந்த தலத்தை விழைந்து
மைந்தன் குமரன் வந்தனனென்ன
ஆங்கிலந் தமிழெனு மருகடல் திரட்டி
அருங்கரத் தேலா தறிவா லேற்றுச்
சுவைத்துத் தெளிந்த தோன்றல் வருக!
உலகிய னடையு மரசியன் முறையும்
பலகலைத் துறையும் பயின்றுளத் தமைத்துச்
சித்திபெற் றுயர்ந்த புத்திய விரட்டி
எனப்பலர் போற்ற மனத்தினி லென்றும்
புரட்டிலா ஆன்ற இரட்டியார் குலத்தை
விளக்கிடுந் தூண்டா விளக்கே வருக!

ஸ்ரீ வரதராஜுலுவின் வண்டவாளம்.

I

மாயவரம் மகாநாட்டைப்பற்றி ஸ்ரீ வரதராஜுலு நாயுடு செய்த சூழ்ச்சிகளைப்பற்றியும், அதுகள் பலிக்காமல் மகாநாடு செவ்வனே நடந்தேறியபிறகும் அம்மகாநாட்டைப் பற்றியும், அதில் நிறைவேறிய தீர்மானங்களையும்பற்றியும்பொறாமைகொண்டுகுரோத புத்தியோடு கண்டித்தெழுதிய பான்மையைப்பற்றியும் சென்றவாரம் விபரமாக ஒவ்வொரு விஷயமாய் பிரித்துப் பிரித்து எடுத்துக்காட்டி பொதுமக்களுக்கு விளங்கும்படி தக்க சமாதானமும் எழுதியிருந்தோம். அதற்கு பதில் என்கிற முறையில் "தமிழ்நாடு" பத்திரிகையில் ஸ்ரீவரதராஜுலு நாயுடு நாம எழுதியதில் ஒரு வரியாவது எடுத்துப்போட்டு அதற்கு சரியான சமாதானமாக ஒரு வரியாவது எழுதுவதற்கு யோக்கியதை இல்லாமல் போனதோடு பயங்கொள்ளித்தனமாய், "நயவஞ்சகம்," "கடைசி வார்த்தை" என்ற தலைப்புகளின்கீழ் "பழைய விரோதம்," "வெகுநாளைய கெட்ட எண்ணம்" என்கிற வார்த்தைகளைப்போய்க் கட்டிப்பிடித்துக் கொண்டு, அதுகளை சரணாகதி அடைந்து தப்பிக்கப் பார்க்கிறார்.

"நாயக்கரின் நயவஞ்சகம்", "பழையவிரோதம்", "வெகுநாளைய பொறாமை" இதுகளைப் பற்றி பின்னால் தக்க ஆதாரங்களுடன் விவரிக்கின்றோம். இப்போது நாம 15-5-27உ "குடி அரசில்" எழுதியதுகளுக்கு என்ன பதில் சொல்லுகிறார் என்றே கேட்கிறோம். அதோடு "எது பொய்ப்பிரசாரம்" என்று 24-4-27 தேதியில் எழுதியதற்கும் என்ன பதில் சொல்லுகிறார் என்றே கேட்கிறோம்.

ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு இதுகளையெல்லாம் லக்ஷியம் செய்து இதற்கு பதில் எழுதிக்கொண்டிருப்பதில் தனது காலத்தை செலவழிக்க இஷ்டப்படவில்லை என்று எழுதித்தப்பித்துக் கொள்ளப்பார்க்கலாம், அது நடவாது. முன் ஒரு தரம் அதாவது பொய் பிரசாரம் என்ற தலைப்பின் கீழ் எழுதியதிலும் இப்படித்தான் எழுதினார். ஆனால் மறுபடியும் கடைசிவார்த்தை என்ற தலைப்பு வந்து விட்டதா இல்லையா? அல்லாமலும் கொஞ்சம் தனக்கு இடம் கிடைத்தும் உடனே பதில் எழுதினாரா இல்லையா. அதாவது "முதலியாருக்கு பயமுறுத்தல் கடிதம் எழுதியவர் ஜஸ்டிஸ்கட்சியார்" என்றும் அதற்கு ஸ்ரீமான் ஒ. கே. ராமசாமிசெட்டியார் கடிதத்தையும்தரிவித்துப் பிரசுரித்தாரா இல்லையா? ஆகவேஇப்போதும்கடைசிவார்த்தைஎன்று எழுதிவிட்டாலும்ஆதாரம்இருந்தால் கண்டிப்பாய்பதில் வருமென்றே நினைக்கிறோம். பதிலெழுத யோக்கியதை இல்லாவிட்டால் அதுவே கடைசிவார்த்தையாக இருக்கட்டும். ஆனால் பார்ப்பனரல்லாதார் கக்ஷியை வைது கொண்டு வாழும் வரை வரதராஜுலுவின் வண்டவாளம் வந்து கொண்டேயிருக்கும்.

1 தேச பக்தர்கள்மாயவரம் மகாநாட்டிற்கு (போகக்கூடாது என்கிற எண்ணத்துடன்) போகமாட்டார்கள் என்று எழுதினாரா இல்லையா?

நமது கேள்விகள்.

2 பிறகு தானே "உடம்பு சௌக்கியமில்லாததால் ஷ்டி மகாநாட்டுக்கு வரமுடியவில்லை" என்று எழுதினாரா இல்லையா?

3 மகாநாட்டு விஷயங்களைப்பற்றி ரிபோர்ட் செய்வதற்கு தமது ஆபீஸ் மேனேஜர் ஒரு பார்ப்பனரல்லாதரிப்போர்ட்டரை அனுப்ப ஏற்பாடு செய்திருந்தும் அவர் போனால் மகாநாட்டுக்கு விரோதமாய் ரிபோர்ட் செய்யமாட்டார் என்று ஒரு பார்ப்பனரிபோர்ட்டரை அனுப்பவேண்டுமென்று உத்திரவு போட்டாரா இல்லையா?

4 மகாநாட்டு தீர்மானங்களில் 4, 5 மாத்திரம் தனது பத்திரிகையில் போட்டுவிட்டு மற்றதை போடாமலே மறைத்துவிட்டதோடல்லாமல், சில தீர்மானம் மகாநாட்டில் செய்திருந்தும் அவைகளை செய்யவில்லை என்பதாக ஒரு போலிக்குற்றம் சாட்டித் தனது குரோத புத்தியைக் காட்டிக்கொண்டாரா இல்லையா?

5 மதுரை மகாநாடு கூட்டும் தேதியில் தானும் ஒரு மகாநாடு கூட்டுவதாக வெளிப்படுத்தி இதற்கு இடைஞ்சல் செய்ய சூழ்ச்சி செய்தாரா இல்லையா?

6 இவ்வாறு சூழ்ச்சியை லக்ஷியம் செய்யாமல் அது செவ்வனே நடக்கப்போகிற சங்கதி தெரிந்து அதை ஒத்திப்போட்டதாக எழுதிவிட்டாரா இல்லையா?

7 ஸ்ரீமான் முதலியாருக்கு பயமுறுத்தல் கடிதம் எழுதினவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவரானாலும நமக்கு அதைப்பற்றி கவலையில்லை, அக்கடிதம் எழுதினவர் "தமிழ்நாடு" பத்திரிகைக்கு ஒரு ஏஜண்டா இல்லையா? என்பதுதான் நமது கேள்வி.

8 அக்கடிதம்எழுதினவர் மகாநாட்டின்போது "தமிழ்நாடு" பத்திரிகைகளை கையில் வைத்துவிற்றுக்கொண்டும்சந்தாசேர்த்துக்கொண்டும் இருந்தாரா இல்லையா?

9 இதை ஸ்ரீமான் ஒ. கே. ராமசாமி செட்டியார் பார்த்தாரா இல்லையா?

10 அன்றியும் ஸ்ரீ வரதராஜுலு நாயுடு "குடி அரசு" எழுதிய மற்ற சங்கதிகளுக்கு எல்லாம் பதில் எழுதாமல் விட்டு விட்டு இதற்கு மாத்திரம் பதில் எழுதப் புறப்பட்டவர் "ஸ்ரீமான் முதலியாருக்கு பயமுறுத்தக் கடிதம் எழுதியவர் ஜஸ்டிஸ் கட்சியார்" என்று எழுதினாரே அல்லாமல் அவர் தமிழ் நாடு ஏஜண்டா இல்லையா என்று ஏன் தானே தைரியமாய் எழுதி இருக்கக்கூடாது? இதற்கு "முதலியார் சொன்னார்" "செட்டியார் எழுதுகிறார்" என்று ஏன் எழுதவேண்டும் என்று இப்பொழுதும் கேட்கிறோம். "குடி அரசு"ம் இதைப்பற்றி எழுதுகையில் "தமிழ் நாடு பத்திரிகையின் ஏஜண்டு ஒருவர் ஸ்ரீமான் முதலியாரவர்களுக்கு ஒரு பயமுறுத்தல் கடிதம் எழுதினார்" என்று தான் எழுதியிருக்கிறதே அல்லாமல் இன்ன கட்சி என்று எழுதிற்று? இந்த சமாதானம் கொல்லத் தெருவில் ஊசி விற்றது போல் இருக்கிறதே அல்லாமல் வேறென்ன?

11 தவிர நாகபட்டணம் ஸ்ரீமான் பக்கிரிசாமி பிள்ளை குமாரர் ஸ்ரீமான் V P காயாரோகணம் பிள்ளை அவர்களும் மற்றும் 63 கனவான்களும் தன்னை மகாநாட்டுக்கு வரும்படி அழைத்ததாக ஒரு போலிக்கடிதத்தைத் தன் பத்திரிகையில் போட்டு விளம்பரம் செய்து கொண்டு அதன் மூலம் ஜஸ்டிஸ் கட்சியையும் வைது பெருமை பாராட்டிக் கொண்டாரா இல்லையா? அக்கடிதம் முற்றிலும் பொய் என்றும் தான் எழுதவில்லை என்றும் "ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு தனது அரசியல் கொள்கை இன்னது என்று யாரும் கண்டு பிடிக்காத மாதிரியில் இருப்பதாலும், அவரது கொள்கைகளும் திட்டங்களும் தினம் இருமுறை மாறி வருவதாலும், நான் அவரது வரவை அவ்வளவு ஆவலுடன் எதிர் பார்க்க நியாயமில்லை" என்று பகிரங்கமாக எழுதி இருக்கிறாரே அதற்கு இதுவரை ஸ்ரீமான் நாயுடு ஏதாவது பதில் எழுதினாரா? ஸ்ரீமான் காயரோகணம் பிள்ளைக்கும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கும் வெகு நாள் விரோதமா பொறாமையா? அல்லது நயவஞ்சகமா? என்று கேட்கிறோம்.

13 இதுவும் தவிர, மன்னார் குடியில்இருந்து சமரச ஞான சபையார் போரல் 48 கனவான்கள் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவை மகாநாட்டுக்கு அழைத்ததாக மற்றும் ஒரு பொய்க்கடிதத்தைத் தனது பத்திரிகையில் பிரசுரித்து தன்னை பெருமை படுத்திக் கொண்டதோடு அதற்கு வரமுடியாது என்பதாக எழுதியதில் ஜஸ்டிஸ் கட்சி பார்ப்பனர்களைத் தாக்குவதால் வரமுடியாது என்று பார்ப்பனருக்கு வக்காலத்து வாங்கி எழுதினாரா இல்லையா? தவிர மன்னார்குடி சமரச ஞான சபை காரியதரிசியார் இம்மாதிரி

இதன் தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க.

நாட்டுநற் கழகத் திட்டுந் தலைமையை
உரியார்க் களித்துள முவத்தலன்றி
மலைத்த லெனமதித்திடு மாண்போர்
நாப்ப ணுதித்த யாப்பிலாத் திறலோய்
சட்ட சபையினிற் றம்மவ ரென்னத்
திட்டமா யுணரத் திராவிடத் நியாயந்
துலங்காப் பதாகை துலங்க நாட்டுங்
கலங்கா வுள்ளக் காவல வருக!
நீதிக் கோரு சாதிப்பேரூர்
நிதிநிறை சீரூர் துதிபெறு மாரூர்
தியாகப் பெருமான் திருவருள் கூட்டிட
உயர்திரு வாளர் உத்தம சீலர்
பன்னீர்செல்வ உடையார் தஞ்சை
நாட்டுக் கழக நாயக ரெனவே
மறுமுறை வெற்றி வயங்கப் பெற்ற
மகிழ்ச்சி நண்பர் மனத்திடம் பெறுது
வழிந்த தன்மைக் கறிகுறி யாகக்
கூட்டிய கூட்டம் குலவிடக் குயிற்றிய
வாய்த்த நாயக மணியே வருக!
கலங்கெடக் கடலிற் கைபிழைத் துழன்று
மலங்கிடு முயிர்க்கோர் மணிவரை கிடைத்தெனத்
தலத்தினி லெங்குந் தளர்ந்திடு திராவிடர்
குலத்தின் பெருமை குறையா தெழுந்து
முன்னுறு மாண்பொடு முந்நீர் வையத்துத்
தன்பெயர் நிறுவித்தலைமை புணர்ந்திட
உலையா நற்கை யொளியா தளிக்குஞ்
சலியாக் குமார சாமி யிரட்டியார்
உண்டென்னத் திசைமுக மொழிக்கப் பரந்த
விள்ளர்ப் புகழணி வேய்ந்தொளிர்
வள்ளலே வருக! வருக!! வருகவே.



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞு வைகாசி-மீ 9-உ.

காங்ரசின்பேரால் பார்ப்பனர்களின் தேசத்துரோகமும் சுயநலமும்

பம்பாயிலஇம்மாதம் 15,16,17,18தேதிகளில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் நாடகம் கவனித்தவர்களுக்கு வேடிக்கையாகத் தோன்ருமல் இருக்காது.

ஒரு ஸ்ரீயின் விபசாரத்தனத்திற்காக அவளது நடத்தையை கண்டிக்கக்கூடிய கூட்டத்தில் அந்த ஸ்ரீயின் விபசாரத்தனத்தினுல் அனேகம் மக்கள் திருப்த்தி அடைகிருர்கள் ஆதலால் அந்த ஸ்ரீயின் பாரோபகாரத்தைப்பாராட்டுகிரும் என்று ஒருதீர்மானம்செய்யப்பட்டதுபோல்,அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் சென்னை சுயராஜ்யக்கட்சியார் காங்கிரஸ்தீர்மானத்துக்கு துரோகம் செய்த விஷயம் முடிவு பெற்றுவிட்டது. ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் ஒரு மாத காலமாக வடநாடு சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்த கருத்தே இதுதான். அனேகமாககாங்கிரஸ்கமிட்டியில் மாகாண சுதந்திரம் பெற்று இம் மந்திரிகளை தோற்கடித்து தாங்களேமந்திரியாக வேண்டிய பிரயத்தனம் செய்தார். ஆனுல் மற்ற மகாணங்களில் உள்ள "காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி தேசபக்தர்களுக்கு" இம்மாதிரி வேட்டை கிடைக்க மார்க்கமில்லாததால் அவர்களின் யோக்கியதை அந்தந்த மகாணங்களில கெட்டுப் போய்விடும் என்கிற பயத்தின் பேரில் அதற்கு ஒருவரும் ஒப்புக்கொளளவில்லை. சென்னை அய்யங்கார் கூட்டத்தார் தங்கள் செல்வாக்கால் மந்திரி ஸ்தானம ஒப்புக்கொள்ளலாம் என்பதாக தீமானம் செய்வதற்கு மற்ருெரு சிறிய தடையும் தோன்றி விட்டது. அதாவது சென்னையில் ஒரு பார்ப்பனர் தான் மந்திரியாக வரக்கூடும. அந்தஒரு ஸ்தானத்திற்கும இரண்டுவகுப்புசண்டையிடுகிறதுஒன்று அய்யங்கார் வகுப்பு மற்ருென்று ஸ்மார்த்த வகுப்பு அய்யங்கார் வகுப்புக்கு ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணயங்கார் நாக்கில் 6 வருஷ காலமாக நீர வடிந்து கொண்டிருக்கிறது. ஏறக்குறைய மூன்றுதேர் தலுக்கும சுமார் லட்சம் ரூபாய்வரை செலவு செய்தவர். அவருக்குக்கிடைக்கவேண்டியது நியாயம். அல்லாமலும் அவருக்குப்பணமும உண்டு ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்காருக்குசமமந்நி. ஸ்மார்த்தபார்ப்பனவகுப்புக்கோ ஸ்ரீமான்சத்தியமூர்த்திக்கு 7,8வருஷமாகவேதாவது ஒரு வேலைக்கு நாக்கில் நீர் ஒழிகிக்கொண்டே இருக்கிறது. ஒரு காலத்தில் ஸ்மார்த்த "குருவான" ஸ்ரீமதி பெசண்டம்மையாரை அய்யங்கார் கூட்டங்கள் எதிர்த்த காலமாகிய காஞ்சிபுரம் மகாநாடு முதலே ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யங்கார் கூட்டத்திற்கு உழைத்து வந்திருக்கிருர் அதற்காக அவ்வப்போது அய்யங்கார் கூட்டம் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்குப்பணப்பை உதவி வந்தாலும் அதுகள் ஸ்ரீமான் மூர்த்தியின் குடும்பச்செலவுக்குதான் ஆயிற்றே ஒழிய மிச்சப்படுத்த உதவவே இல்லை அய்யங்கார் கூட்டம் தங்களது பத்திரிகையில் தூக்கி விட்டார்கள் என்ருலும் அதுகள் தங்கள் சுய நலத்துக்கே அல்லாமல் ஸ்ரீமான் மூர்த்திபிழைப்புக்கு இவர்கள் உதவிய பணம தவிர பத்திரிகை விளம்பரத்தால் ஒரு காசும் லாபம் இல்லை. சப்ஜட்ஜ் முதலிய வேலைகள் கிடைத்திருக்குமாணுலும் ஸ்ரீமான் சி. பி. அய்யர் பழையவிரோதத்தைமனதில் வைத்துக்கொண்டு உன்யோக்கியதைக்குசப் ஜட்ஜி வேலைக்கு போவது மிகவும் குறைவானது மந்திரி பிரசிடெண்ட் கமிட்டி மெம்பர் முதலியதுகள் தான் தக்கது" என்று சொல்லி விட்டாராம். ஆகவே அவருக்கு கண்டிப்பாய்ஒருமந்திரிவேலைகொடுத்துதான் தீரவேண்டும். அப்படியே கொடுக்க வேண்டும் என்று ஆரம்ப முதலே ஸ்மார்த்தப்பிராமணர்கள் சிபார்சு செய்தும் வருகிருர்கள். ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு மந்திரி வேலை கொடுப்பதில் அய்யங்கார்கள் கூட்டத்தாருக்கு மற்ருெருபயமும்இருக்கிறது. என்னவென்ருல் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி இடம் அய்யங்கார்களுக்கு உள்ளுக்குள் நம்பிக்கையுமில்லை யாரையும் நன்ருய் திட்டுகிருர் என்பதும் யார் திரும்பிதிட்டினுலும் கொஞ்சமும் சலிக்காமல் அவ்வளவையும் வாங்கி மூட்டை கட்டிக்கொள்ளுகிருர் என்கிறதினுலும் அவரை உசுப்படுத்தி விட்டு மற்றவர்களைத் திட்டச்சொல்லுகிறவரையில்தான் அய்யங்கார்களுக்கு அவரிடம்நம்பிக்கையே அல்லாமல் வேறு வழியில் அய்யங்கார்களுக்கு அவரிடம் நம்பிக்கை இல்லை. அன்றியும் ஒரு சமயம் தங்கள் மீதும் ஏதாவது திரும்பவிடுமோஎன்கிற பயமும்எப்போதும் அய்யங்கார் கூட்டத்திற்கு உண்டு. அதினுல் தான் அவரை லீடராக்காமல்ஸ்ரீமான் சாமி வெங்கிடசலத்தைலீடராக்கினதும் காங்கிரசுக்கு காரியதரிசி ஆக்காமல் சுயராஜ்யக்கட்சியோடு நிருத்தி விட்டதுமே தவிர வேறில்லை இக்காரணங்களாலேயே சுயராஜ்யக்கட்சிக்கு மந்திரி பதவி இப்போது அழுவாரற்ற பிணங்களாக நாறிக்கொண்டிருக்கிறதே அல்லாமல் வேறில்லை

நிற்க சென்னை சுயராஜ்யக் கட்சியார் செய்த காங்கிரஸ் துரோகத்தைப்பற்றிய கண்டத்தீர்மானம் வந்த சமயம், தலைமைப் பதவியில் இருந்த ஸ்ரீமான் நேரு "11 மணிக்கு 10 நிமிஷம் இருக்கிறது. இந்த விஷயம 10 நிமிஷத்துக்குள் முடிந்து விடவேண்டும். இத்தீர்மானத்தின் மேல் யாரும் அதிகமாய் பேசக்கூடாது" என்று அடக்குமுறை உத்திரவிட்டாராம், இதன் பேரில் கூட்டத்தில பெரிய குழப்பமும் கூச்சலும்உண்டாயிற்றும். இந்தியாவிலுள்ள எல்லாப் பத்திரிகைகளும் ஏறக்குறைய பார்ப்பன சம்மந்தமுடையதாகவேயிருப்பதால் ஒன்ருவது இக்குழப்பத்தின் விவரத்தையும் அங்கு நடந்த வாக்குவாதத்தையும் சரியாய் போடவேயில்லை. பார்ப்பனர்களுக்கு விரோதமாக ஏதாவது ஒரு காரியம் நடை பெருவதனுல் சட்டம் என்பதின் மூலமாகவோ குழப்பத்தின் மூலமாகவோ தப்பித்துக் கொள்ளுகிற வழக்கமானதால் இதிலும் அப்படியே குழப்பம் செய்து மெள்ள தீர்மானத்தை காரியக் கமிட்டிக்கு தள்ளிவிட்டார்கள். அக்கிராசனுதிபதி பார்ப்பனர், குற்றம் செய்தவர் பார்ப்பனர், தீர்மானம் கொண்டு வந்தவர் அவரப்பார்ப்பனர். கலகம் செய்தவர் பார்ப்பனர். இந்நிலைமையில் இசுதீர்மானம் என்ன ஆகும் என்று யாரும் யோசிக்க வேண்டியதே இல்லை. கடசியாக காரியக்கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. அங்கு என்ன முடிந்தது என்ருல், 'சென்னை சுயராஜ்ஜியக் கட்சியார் காங்கிரசுக்கோ கௌசுத்தி தீர்மானத்திற்கோ விரோதமாக ஒன்றும் செய்து விடவில்லை தவிரவும் அவர்கள் சென்னை மந்திரி விஷயத்தில் நடந்து கொண்டதைப்பற்றி இந்த சபை பாராட்டுகிறது" என்கிற மாதிரி தீரமானம் நிறைவேற்றப்பட்டது. இது எப்பேர்பட்ட அயோக்கியத்தனமான பித்தலாட்டம் என்பதை வாசகர்கள் தான் உணர வேண்டும்

இதை ஆந்திர தேசத்துப் பார்ப்பனரும் ஒப்புக்கொண்டார்கள் என்ருல் அவர்களின் அயோக்கியத்திற்கும் இதைவிட வேறு சாட்சி என்னவேண்டியிருக்கிறது "நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு" என்கிறமாதிரி தமிழ் நாடு பார்ப்பனரும் ஆந்திர நாட்டுப் பார்ப்பனரும் சேர்ந்து பாமர ஜனங்களை ஏமாற்றும் பித்தலாட்டமே அல்லாமல் மற்றபடி வேறென்ன? என்று கேட்கிருேம்.

இந்து முஸ்லீம் ஒற்றுமை.

தவிர இந்து முஸ்லீம்ஒற்றுமை ஏற்பட்டு விட்டதாக ஒரு வேஷம் புதிதாக கட்டி விட்டிருக்கிருர்கள். ஏதோ ஆங்கிலம் படித்த நான்கு மகமதியர்கள் உத்தியோகத்திற்குஆசைப்பட்டு "நாங்கள்ராஜியாய்விட்டோம்" என்று சொன்ஞல் அது 7 கோடி முஸ்லீம்களை கட்டுப்படுத்திவிட்டதாக அர்த்தமா என்று கேட்கிருேம. சென்னையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு கிடைத்துள்ள மகமதிய ஜனுப் பிரதிநிதிகளைப்போலவே வடநாட்டிலும் உத்தியோகம் பதவி முதலிய ஆசை கொண்ட சில ஜனுப்புகள் இருக்கிருர்கள். அவர்கள் தங்களுக்கு எப்படி மந்திரி பிரசிடெண்ட் நிர்வாகசபைமெம்பர் முதலியதுகள்கிடைக்கும் என்கிறதைத்தவிர வேறு நிலையான சமூகாபிமானம் இல்லை. அவர்களுடைய அறிவும் ஆராய்ச்சி ஆற்றலும் பொதுஜனங்கள் தெரிந்துகொள்ளவேண்டுமானுல் அதற்கு ஒரு உதாரணம காட்டுகிருேம். அதாவது ஒரு மகமதிய கனவான் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை புகழ்ந்தபோது ஸ்ரீ அய்யங்கார் 'தமிழ் நாட்டில் பிராமணர்-பிராமணரல்லாதார் சண்டையை அடியோடு ஒழ்கதுவிட்டவீர் என்று சொன்னாராம்" 'இது எப்படி இருக்கிறது என்ருல், பஞ்சபாண்டவாகளை எனக்குத்தெரியாதாகட்டில் குத்துக்கால்கள்

போன்று மூன்று பேர்கள் என்று சொல்லி இரண்டு விரலைக் காட்டினானாம்." அதுபோல் சீனிவாசய்யங்காரையாவது தமிழ் நாட்டையாவது பிராமணர்-பிராமணரல்லாதார் சண்டையையாவது அது எதுபற்றியது என்பதையாவது சரிவர தெரிந்திருந்தால் இம்மாதிரிபேசி இருக்கவேமாட்டார். தமிழ்நாட்டில் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் சண்டை ராஜியாய்விட்டதா? அல்லது ஒழிந்துவிட்டதா? ஜஸ்டிஸ்கட்சி மறைந்துவிட்டதா? இவற்றை எந்த யோக்கியராவது சீனிவாசய்யங்கார் செய்துவிட்டார் என்று சொல்லக்கூடுமா? வேறு வழியில் மனிதனாகமுடியாதவர்களையும் வேறு வழியில் ஜீவிக்கமுடியாதவர்களையும் கூலி கொடுத்து சுவாதீனம் பண்ணிக்கொண்டு அவர்களை உசுப்படுத்தி பார்ப்பனரல்லாதாரையும் அவர்களது இயக்கத்தையும் வையும்படி சொல்லிவிட்டதினாலும் ஏதோ சில கஞ்சிக்கு வழியில்லாமல் வயிற்றுக்கொடுமையால் அவதிப்படும் ஆள்கள் ஊரூராய்த்திரிந்து பலரை வைதே வயிறு வளர்க்கவேண்டி ஏற்பட்டுவிட்டதினாலேயும் அவர்களைப்பிடித்து பாமர ஜனங்களிடம் பொய்யும் புளுகும் சொல்லி காசுபணம் செலவுசெய்து ஏமாற்றி ஒன்று இரண்டு தடவை ஓட்டு வாங்கிவிட்டதினாலேயும் மூன்றரைக்கோடி மக்களுடைய உணர்ச்சியை அடக்கிவிட்டதாகுமா? அல்லது ஜெயித்துவிட்டதாகுமா? என்பதை யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

"இந்து முஸ்லீம் சமாதானம்" என்பது என்னவென்றால்முஸ்லீம்களுக்கென்று பிரித்துவிட்டிருக்கும் வகுப்புவாரித்தொகுதியை ஒழித்து கலப்பு தொகுதியை ஏற்படுத்திக் கொள்ள முகமதியர்கள் சம்மதித்துவிட்டார்களாம். இந்த தந்திரம் செய்த தமிழ்நாட்டு பார்ப்பனர்கள் உத்தேசமென்னவென்றால் நமது மாகாணத்தில் வகுப்புவாரி உரிமை அதாவது பார்ப்பனர்களுக்கும் நமக்கும் தனித்தொகுதி வேண்டுமென்றுநாமகேட்பதை ஒழிப்பதற்காக "மகமதியாகூடவேண்டாம் என்கிறார்கள்" என்று சொல்லவே இந்த தந்திரம் செய்திருக்கிறார்கள்.

இதைக் ஆங்கிலம் படித்து உத்தியோகத்திற்கு நத்திக்கொண்டிருக்கும் ஏதோ சிலர் தவிர மற்ற மகமதியர் கண்டிப்பாய் ஒத்துக்கொள்ளப் போவதில்லை என்பது நமக்கு நன்றாய்த் தெரியும். ஏனெனில் இதற்குமுன் ஒரு தடவை இவ்வகுப்புவாரி உரிமையை ஒழிக்கும் சூழ்ச்சியாக "தேசிய ஒப்பந்தம்" தயாரிக்கும்படி டாக்டர் அன்சாரி லாலாஜி ஆகியவர்களை ஒரு கமிட்டியாக போட்டதில் அவர்கள் முனிசிபாலிட்டி தாலூகா போர்டுக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று ரிபோர்ட்டு செய்தார்கள். தனித்தொகுதியை எடுத்து கலப்புத்தொகுதி ஏற்படுத்தலாம் என்று அவ்விருவர் சொன்ன அபிப்பிராயத்தைமற்ற மகமதியர்கள் அப்போதே நிராகரித்துவிட்டார்கள் இவ்வகுப்புவாரிஉரிமை மகமதியர்களுக்கு கிடைத்தபிறகுதான் அவர்கள் மனிதர்களாக பார்ப்பனர்களால் மதிக்கப்படுகிறார்கள். அதற்குமுன் மகமதியரைத் தொட்டால் தொட்ட விரலை வெட்டிவிட வேண்டும் என்றும், மிலேச்சர் என்றும், எழுதிவைத்துக்கொண்டிருந்தவர்கள் என்பதற்கு இன்னமும் ஆதாரமிருக்கிறது. ஆதலால் சுயமரியாதை உள்ள எந்த மகமதியரும் இந்தப் பார்ப்பனர்களின் இப்போதைய சில நல்ல வார்த்தைக்கும் இரண்டொருவருக்கு பணம் செலவுசெய்து முனிசிபாலிடி சட்டசபை முதலியதுகளுக்கு ஸ்தானம் சம்பாதித்துக் கொடுத்திருப்பதையும் நிரந்தர நன்மையாய் நினைத்துக்கொண்டு ஏமாந்துவிடமாட்டார்கள் என்றே உறுதி கூறுவோம். சமீபத்தில் கூட்டப்போகும் திருச்சி மஜிலிஸ் உலமா கான்பரன்சு இந்த விஷயத்திற்காக கூட்டப்படுகிறதென்றே கேள்விப்படுகிறோம். தவிரவும் சென்னை ஐகோர்ட் ஜட்ஜி பதவிக்கு ஒரு மகமதிய கனவானையும் நியமிக்க வேண்டுமென்று தமிழ்நாட்டுப் பிரபல மகமதிய கனவான்கள் கூடி ஒரு தீர்மானம் செய்ததை வாங்கிக் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டு "பிர்மாவின் முகத்தில் பிறந்த பிராம்மணோத்தமர்களாகவே" போட்டிருப்பதையும் மகமதிய கனவான்கள் பார்க்காமலில்லை. ஆதலால் மகமதியர்களுக்கு அளித்திருக்கும் வகுப்புவாரி உரிமையை அவ்வளவு சீக்கிரத்தில் பார்ப்பனர்கள் அழித்துவிடும்படி விட்டுவிட நமது முஸ்லீம் சகோதரர்கள் அவ்வளவு ஏமாளிகள் என்று நாம் நினைக்கவில்லை.

சுயராஜ்ஜியத் திட்டம்.

சுயராஜ்யத்திற்கு திட்டம்போட மறுபடியும் ஒருகமிட்டி நியமித்திருக்கிறார்களாம். இதை எல்லாவற்றையும்விட பெரிய பித்தலாட்டம் என்றே சொல்லுவோம். இதற்குமுன் ஒருதடவை ஸ்ரீமான் நேரு முதலியவர்கள் பிதவாதிகளுடனும் சுயேச்சைக்கட்சிக்காரருடனும் ராஜிசெய்துகொண்டு குறைந்த அளவு சுயராஜ்யத் திட்டம் (நேஷனல் டிமாண்டு) என்னும் பேரால் ஒரு திட்டம் தயாரித்து 1924-ஞ பிப்ரவரி மீ 18உ இந்தியா சட்டசபையில் வைத்து நிறைவேற்றியது இப்போது என்னவாயிற்று என்றுகேட்கிறோம்? "சர்க்காரார் தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொள்ளாவிட்டால் அல்லது மாற்றிக்கொண்டதாக காட்டிக்கொள்ளாவிட்டால் சட்டமறுப்பு முட்டுக்கட்டை வெளியேற்றம் முதலிய காரியங்கள் செய்வது" என்ற வீரமொழிகள் என்னவாயிற்று? சர்க்கார் இத்திட்டங்களை ஏற்றுக்கொள்ளாததாலும் யாதொரு பதிலும தெரிவிக்காமல் குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டதாலும் மனமாற்றத்தைக் காட்டாததாலும் வெளியே போகிறோம் என்று சொல்லி சட்டசபையைவிட்டு ஒருதாம் வெளிபோகி மறுபடியும் கொஞ்சமாவது மானமின்றி உள்ளே போய் இதுகாலவரையில் இருந்தும்விட்டு இப்போது மறுபடியும் ஒரு புதுத்திட்டம் தயாரிக்க கமிட்டி என்றால் இது யாரை ஏமாற்றுவதற்கு என்றுதான் கேட்கிறோம்? முன்திட்டமே குறைந்த அளவு திட்டமாய் இருந்தும்அது குப்பைதொட்டியில் இருக்கும்போது இத்திட்டம் இனி அதைவிடக்குறைவாய்த்தானே இருக்க வேண்டிவரும். ஆகவே, சுயராஜ்யக் கட்சி ஏற்பட்டதுமுதல்ஒத்துழையாமையை ஒழித்ததோடல்லாமல் மகாத்மாவையும் மூலையில் உட்காரவைத்ததோடல்லாமல் சர்காரோடு திருட்டுத்தனமாய் ஒத்துழைப்பதோடல்லாமல் இனியும் திட்டம் திட்டம் என்று சொல்லிக்கொண்டு தேசத்தை பாழாக்குகிறார்கள் என்பதைப்பற்றி யாருக்காவது கவலை இருக்கிறதா? இவர்களுடைய திட்டம் எல்லாம் இனியும் கொஞ்சம் உத்தியோகமும் அதிகாரமும் அல்லாமல் வேறு என்ன? இம்மாதிரி மானம், வெட்கம், நாணயம், யோக்கியம் ஒன்றுமில்லாத கடைந்தெடுத்த அயோக்கியர்களாக சேர்ந்து தேசத்தை காட்டிக் கொடுத்து பாழாக்கி அதிகாரம் பெற்று பணம் சம்பாதித்துத் தான் வாழ ஆதாரமாய் ஒரு கட்சியையும் சபையையும் ஏற்படுத்திக் கொண்டு அதை தேசத்தின் பிரதிநிதித்துவ சபை என்றும் அதில் உள்ளவர்கள் தேசாபிமானிகள் தேசப்பிரதிநிதிகள் என்றும சொல்வதானால் இதுகளையுடைய நாடு சுயமரியாதை உடைய நாடு என்றாவது சுதந்திரம் பெற யோக்கியதை உடைய நாடு என்றாவது சுய புத்தி உள்ள நாடு என்றாவது எந்த முட்டாளாவது சொல்லக்கூடுமா? சொல்லக் கூடுமா? சொல்லக்கூடுமா? என்று மும்முறைகேட்கிறோம். இம்மாதிரி சபைக்கு ஆள் பிடிக்க இனியும் நமது நாட்டில் வயிற்றுச்சோற்று கங்காணிகள் ஏற்பட்டுக் காங்கிரஸ் காங்கிரஸ் என்று சொல்லிக் கொண்டே வந்தால் மற்றவர்கள் பேசாமல் பார்த்துக் கொண்டு தேசத்தையும் மக்களையும்பலிகொடுப்பதா என்று யோசித்துப் பாருங்கள். சென்ற தேர்தலில் காங்கிரஸ் புரட்டுக்கு கொஞ்சம் வெற்றிகள் ஏற்பட்டு விட்டதால் "தினமும் செய்ச் சோற்றுப் பிச்சை கிடைக்கும்" என்பது போல் உத்தியோகத்திலும் சட்டசபையிலும் தாலூகா ஜில்லா போர்டு முனிசிபாலிட்டியிலும் ஆசை உள்ள கூட்டங்களுக்கு இப்போது காங்கிரசிடம் கொஞ்சம் இழுப்பு அதிகமாய் இருந்து கொண்டு வருகிறது. ஜஸ்டிஸ் கட்சிக்கும இதில் கொஞ்சம மயக்கம இருக்கிறது போல் தெரிகிறது. இந்த காங்கிரசும் இந்த காங்கிரசில் உள்ள சிகாமணிகளும் இந்த காங்கிரசால் ஏற்பட்ட உத்தியோகங்களும் பதவிகளுமே தான்நமது நாட்டின் ஒற்றுமையை குலைத்ததற்கும் தரித்திரத்தைஉண்டாக்கியதற்கும் ஏழை குடியானவர்களுக்கு வரியை அதிகமாக்கியதற்கும் மக்களுக்கு தேசாபிமானம் பரோபகாரம் முதலிய குணங்கள் போய் தேசத்துரோகம் சுயநலம முதலிய கெட்ட குணங்கள் உண்டாகியதற்கும் அடிப்படையானஜவாப்புதாரிகளென்பதைதைரியமாய்சொல்லுகிறோம்பலதடவை சொல்லியும்இருக்கிறோம. அவர்களுக்கு இதுவரை எந்த "தேசபக்த"ராவது தேசத்தொண்டராவது "தேசிய பத்திரிகையாவது" "சுயராஜ்ஜிய வீரராவது" பதில் சொல்லவே இல்லை. கங்காணி வேலையை விட்டு விடவும் இல்லை. ஆனாலும் ஜனங்கள் முட்டாள்களாயிருக்கும் வரை காட்டில் இதுகளுக்கு யோக்கியதை இருந்து கொண்டு தானிருக்கும். புத்திவரும் நாள் என்றோ?

கோயமுத்தூர் ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

மேற்படி மகாநாடு விஷயமாய் 15-5-27ல் கோவை கிருபாசர நிதி பாங்கியில் ஸ்ரீமான் வெரிவாடு செட்டியாரவர்கள் தலைமையின் கீழ் ஒரு பெருங்கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்திற்கு அவ்வூர் பிரமுகர்களும் மற்றும் வெளியூர்களிலிருந்து பல கனவான்களும் வந்திருந்தார்கள்.

திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரசிடெண்டு திவான் பகதூர் S குமாரசாமி செட்டியார் M. L. C. அவர்களை மகாநாட்டுத்தலைவராகவிருக்க ஏகமனதாய்த் தீர்மானித்தார்கள். பிறகு மகாநாட்டுக்குச் செல்வமும் செல்வாக்கும் பரோபகார சிந்தனையும் பொது நல நோக்கமும் உள்ள ஸ்ரீமான்கள் C. S. ரத்தினசாபாபதி முதலியார் அவர்கள் எம். எல் சி. ஜில்லாபோர்டு பிரசிடெண்ட் கோயமுத்தூர் சாத்தப்ப செட்டியார், அவர்கள் சாலீஸ்வார் மில்ஸ் கோயமுத்தூர் P S. G. நாயுடு & சன்ஸ் அவர்கள் ரங்க விலாஸ் மில்ஸ்பீளமேடுபி. நஞ்சுண்ட கவுண்டர், அவர்கள் டவுன பாங்க் காரியதரிசி கோயமுத்தூர், என். வ. நஞ்சப்ப கவுண்டர், அதர்கள் ஜில்லாபோர்டு வைஸ் பிரசிடெண்ட் கோயமுத்தூர், ரத்தினசபாபதி கவுண்டர் அவர்கள் மிராஸ்தார் அன்டு காரியதரிசி கொங்குவேளாளசங்கம் பொள்ளாச்சி ஆகியவர்களை மகா நாட்டுக் காரியதரிசிகளாகவும், ஸ்ரீமான்கள் பழனிசாமி நாயுடு, சுப்ப செட்டியார், பரமேஸ்வரம் செட்டியார் ஆகியவர்களை ஆபீசு செக்ரடரியாகவும் தெரிந்தெடுக்கப்பட்டது. மற்றபடி சுமார் 150 கனவான்கள் உப அக்கிராசனர் நிர்வாகசபை அங்கத்தினர்களாக தெரிந்தெடுக்கப்பட்டது. மகாநாட்டுக்கு இதுவரை ரூ 3500 வரை கையொப்பமிட்டிருக்கிறது. முன் வெளியானது போக இப்போது கையொப்பமான தொகைக்கு விபரம்,—

ஸ்ரீமான்கள்	ரூ.
V. C. வெள்ளிங்கிரி கவுண்டர்	50
சென்னிமலை கே. கிருஷ்ணா முதலியார்	35
சிவக்கொழுந்து முதலியார் கோபி	50
S முத்துக் கவுண்டர் கோபி	50
கோபி காளியண கவுண்டர் கோபி	50
S. முத்துவேலப்ப கவுண்டர்	100
பழயகோட்டை பட்டக்காரர்	100
ச. கோ. லக்ஷிமி நாராயணசாமி நாயுடு	100
P. முத்துக் குமசாமி கவுண்டர்	25
பட்டக்காரர் T. வீரப்ப கவுண்டர்	25
R. V. ராமசாமி கவுண்டர், திருப்பூர்	50
பொள்ளாச்சி அ. பால சுப்பராயலு நாயுடு	25
மு. க. & வ. வெ. கா. சி. & Sons	35
சாஹ்ரும கா. மில்ஸ் பஞ்சறைப்பவர்கள்	100
பெரி. கோ. மில்ஸ் பஞ்சறைப்பவர்கள்	100

மகாநாடு ஜூன் 11, 12 தேதி சனி ஞாயறுகளில் கண்டிப்பாய் நடைபெறும. மற்றும் சில மகாநாடுகளும் நடைபெறும். ராஜீயவிஷயத்தில் பலகிறப்பட்ட அபிப்பிராயங்களும் ஜஸ்டிஸ் கக்ஷியில் சேரத் தக்கமாதிரியான யோசனைகளும் நடைபெரும். ஜில்லா பிரமுகர்கள் எல்லோரும் இம்மகாநாடு விஷயத்தில் மிகுதியான ஊக்கம் காட்டுவதோடு எல்லோரும் ஒன்று சேர பாடுபடுவது குறிப்பிடத்தக்கது.

ஒரு நிருபர்

(7ம் பக்கத் தொடர்ச்சி.)

கடிதம் தாங்கள் எழுதவில்லை என்று எழுதி இந்த பித்தலாட்டத்தை வெளியாக்கினார்களே அதற்கு ஏதாவது ஸ்ரீமான் நாயுடு பதில் எழுதினாரா? சமரச ஞான சங்கக் காரியதரிசியாருக்கும் ஸ்ரீ வரதராஜுலுக்கும் வெகு நாள் விரோதமா பொறுமையா அல்லது நயவஞ்சகமா? தவிர, ஷை மன்னார்குடி கடிதத்தில் காணும் 48 பெயர்களையும் தலைப்பு எழுத்துக்கள் இல்லாமல் மொட்டை மொட்டையாக பத்திரிகையில்போட்டுக் கொண்டதிலிருந்தே இக்கடிதம் இக்காரியத்திற்கு என்றே சிருஷ்டிக்கப்பட்டதும் அனுமதேயக்கடிதம் என்பது உறுதியாகிறதா இல்லையா?

இத்தனை புரட்டும் பித்தலாட்டமும் நாணயக் குறைவும் தன்னிடம் பிறர் கண்டுபிடிக்க இடம் ஏற்படுகிறதே என்பதற்கு கொஞ்சமாவது வருந்தாமலும் வெட்கப்படாமலும் பொது நன்மையை உத்தேசித்து தனக்கு சரி என்று தோன்றியதை யாராவது நியாய வழியில் செய்தால் அதனிடம் பொறாமையும் துவேஷமும் கொள்ளுவதும் அதைக் கெடுக்க சூழ்ச்சி செய்வதும் அதை யாராவது கண்டித்தால் அது பழய விரோதம் பொறாமை நயவஞ்சகம்என்று எழுதுவதும் எவ்வளவு இழிகுணம் என்பதை வாசகர்கள் தான் உணர வேண்டும்.

ஸ்ரீமான் நாயக்கர் எழுதியவைகளுக்கு தலைப்புப்பேர் கொடுத்த நயவஞ்சகம் என்கிற வார்த்தையைத்தான் ஸ்ரீமான் நாயுடு மே மாதம் 4ந்தேதி 'தமிழ் நாடு" பத்திரிகையில் சுதேச மித்திரனுக்கும் கொடுத்து இருக்கிறார் அதாவது "சுதேச மித்திரனின் நயவஞ்சகம்" என்று தலையங்கமிட்டு ஒரு வியாசம் இது போலவே எழுதி இருக்கிறார்.

ஸ்ரீமான் நாயுடுவின் வண்டவாளத்தை வெளிப்படுத்துகிற ஒவ்வொருவருக்கும் ஸ்ரீமான் நாயுடு இந்தப் பெயரையே கொடுத்து தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார் போலிருக்கிறது. அது கண்டிப்பாய் இனி நடவாது என்றும் ஸ்ரீமான் நாயுடுவிடம் "நயவஞ்சகம்" என்கிற பெயர்வாங்க இனியும் 1000க்கணக்கான பெயர்கள் நமக்குப் பின்னால் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் ஸ்ரீமான் நாயுடு மேல்கண்ட தனது குணங்களை மாற்றிக்கொண்டாலொழிய "நயவஞ்சகம்" தமிழ் நாட்டு மக்களிடம் நிற்கப்போவதில்லை என்றும், வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.

மற்றபடி நாயக்கரின் நயவஞ்சகம்என்ற தலைப்பின்கீழ் கண்ட கடிதங்களுக்கும் கடைசி வார்த்தைக்கும் அடுத்த வாரம் விபரமாய்பதில்எழுதுவோம் ஏனெனில்அக் கடிதங்கள் சம்பந்தமாக சில ஆராய்ச்சிகள் வேண்டியிருப்பதாலும அதுகளுக்கு பதில் எழுதிய பலகடிதங்களைத் தேடி எடுக்க வேண்டியிருப்பதாலும் நாம் கோவை கள்ளிக்கோட்டை முதலிய இடங்களில் இந்த வாரம் முழுவதும்செலவு செய்யவேண்டி ஏற்பட்டு விட்டதாலும் சாவகாசமும் இடமும் இல்லை. ஆனாலும் அடுத்தவாரம் நாலுபக்கம் இதற்காகவே அதிகமாய்ப் போட்டு விபரமாய் எழுதுகிறோம்.

குறிப்பு.—

பார்ப்பனரல்லாதாருக்குள்ளாகவே நாயக்கரின் நயவஞ்சகமும் வரதராஜுலுவின் வண்டவாளமுமான மனவருத்தத்திற் கிடமான சங்கதிகள் எழுவநேரிடுவதுபற்றிசிலஉண்மையான பெரியோர்களின்மனம் சங்கடப்படக்கூடும்என்பதுநமக்குத் தெரியும்ஆனாலும் இதனால்ஒன்றும்முழுகிப் போய்விடாது. உலகத்திற்கோ சமூகத்திற்கோ இதனால் நன்மையே தான் ஏற்படும் என்பதேநமது உறுதியாகும். ஏனெனில்நம்முடைய வேலையோ ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களுடைய வேலையோ அவரவர்கள் சொந்த நன்மை தீமைகளைப் பொருத்த வேலையல்ல என்பதும் பெரிய ஒரு சமூகத்தின் போராலும் ஒருதேசத்தின் போராலும் நடைபெறுகின்றது என்பதும்முதலில் பொதுஜனங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வளவு பெரிய பொறுப்புள்ள வேலைகளைமேற்கொண்டு அதற்காக உழைப்பதாக சொல்லிக் கொள்ளுபவர்களின் யோக்கியதைகளும் நாணயங்களும் பொது மக்கள் அறியும்படிவெளியாக்கவேண்டியது அவசியமா இல்லையா என்பதை யோசித்துப்பார்த்தால் விளங்காமல் போகாது. மகாத்மாகாந்தி அவர்களுக்கு நாட்டில் உள்ள பெருமை முதலியதுகள் எல்லாம் அவருடைய யோக்கியதையைப்பற்றியும் நாணயத்தைப்பற்றியும் ஜனங்கள் அறிய நேர்ந்தமைதானே தவிர வேறில்லை. இவ்விவகாரங்கள் எத்தனைக்கெத்தனை யார் யாருடன் ஏற்படுகிறதோ அத்தனைக்கத்தனை அவரவர்கள் தொண்டுக்கு தக்க பலனை அளிக்கும் என்பது நமது எண்ணம்.

விளம்பரம்.

ஸ்வராஜ்யத்தைப்பற்றி மகாத்மா.

காந்தி என்ன சொல்கிறார் என்று அறிய வேண்டுமானால் "வியாசக்கோவை" என்ற நூலை உடனே படியுங்கள். இதில் தேசாபிமானத்தைப்பற்றி பல அறிய ரஸமான விஷயங்கள் காணப்படும். தேசாபிமானத்தையும், மதாபிமானத்தையும் விரும்பும் ஒவ்வொரு இந்து முஸ்லீம்களுக்கும் இந்நூல் மிகவும் அவசியம். டாக்டர் பி. வரதராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. விலை ரூ, 1.

சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன.

வ. மி. ஷம்சுதீன் சாஹிப்,
(ஆக்கியோன்)
தபாற்பெட்டி பெட்டி நெ, 339,
கொழும்பு.

கொண்டைக்காவல் ரோட் அய்யம்பாளையம் குடிகள் வரவேற்பு

6—5—27-ல் வெள்ளிக்கிழமை யன்று காலை 12-மணிக்கு ஸ்ரீமான் P. T. ராஜன் M. L. C. அவர்களையும், ஸ்ரீமான் W. P. A. சௌந்திர பாண்டிய நாடார் அவர்களையும், E. V. இராமசாமி நாயக்கர் அவர்களையும், அதிக விமரிசையுடன் வரவேற்று, மாலையிட்டு பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கு முன்பாக கூட்டம் ஸ்ரீமான், E. V. இராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. அவ்விழாவிற்கு அநேக இடங்களிலிருந்து அநேகர் விஜயம் செய்திருந்தனர். ஆங்கு ஸ்ரீமான் P. T. ராஜன் அவர்களுக்கு மகா-ள-ள-ஸ்ரீ சோ, ராமசாமி நாடார் அவர்களாலும், ஸ்ரீமான் சௌந்திர பாண்டிய நாடார் அவர்களுக்கு மகா-ள-ள-ஸ்ரீ அய்யம்பாளையம் கர்ணம் அழகிய சுந்தரம் பிள்ளை அவர்களாலும், ஸ்ரீமான் E. V. இராமசாமி நாயக்கர் அவர்களுக்கு மகா-ள-ள-ஸ்ரீ கூடலூர் பகவதி சவுடர் அவர்களாலும் பிரசுரமான பத்திரம் வாசித்து அதிக விமரிசையுடன் அளிக்கப்பட்டது. பின் முடிவாக நாயக்கர் அவர்கள் எழுந்து, மதுவினால் வரும் கெடுதியையும், அதை அறவே ஒளிக்க வேண்டும் என்றும், பார்ப்பனர்களின் மோசத்தைப் பற்றியும்; அன்னவர்கள் செய்து வரும் சிரார்த்தம் கெடுதியென்பதையும், ஆல்லது நாம் பார்ப்பனர்களைக் கொண்டு சிரார்த்தம் செய்யக்கூடா தென்பதையும், கதரையே எல்லாம் கையாட வேண்டுமென்பதையும், கதரை நாமே நாட்டு வைத்து நெய்வதில் அநேக நமது ஏழை மக்கள் பிழைக்கின்ற விதத்தையும், ஹிந்து மதத்தைப் பற்றிய விஷயத்தையும், ஜாதிபேதமையல்ல வென்பதைப்பற்றியும், அதிக தெளிவாகவும், விரிவாகவும் பேசி முடித்தார். பின் ஆங்கு எல்லோரையும் போட்டோ மிகவும் அலங்காரமாக பிடிக்கப்பட்டு, அன்னவர்களுக்குஅதிக பலகாரத்துடனும், வைபோகத்துடனும் விருந்தளிக்கப்பட்டது. பின் அம்மூவரையும் கூட்டி மேள வாத்தியத்துடன் ஊர்கோலம் வரப்பெற்று கூட்டம் கலைவிக்கப்பட்டது.

சோ. ராமசாமி நாடாவியார்

ஸ்ரீமான்
பட்டிவீரன்பட்டி, ஊ. பு. அ.
சௌந்திரபாண்டிய நாடார் M. L. C.
அவர்களுக்கு
அய்யம்பாளையம் மகாஜனங்கள்
வாசித்தளித்த

நல்வரவுப் பத்திரம்.

விருத்தம்

சந்திரன்றன் களங்கமதைத் தவிர்க்காமல்
தாரணியில் மானுடர்கள் சார்ந்து வாழச்
சுந்தரஞ்சேர் தன்னொளியின் கதிர்ப்பரப்பித்
தூயவெளி யாங்கவர்கருத் துலக்குமா போல்
வந்துதித்துச் சென்னைநகர் எம். எல். சி. யில்
வண்மையொடுகம்குறையைவழுத்தாநிற்கும்
சந்ததிசேர் சீமான் சௌந்தர பாண்டியன்
சற்குணத்தை எந்நாளும் சாற்றுவோமே.

அன்பிற்சிறந்த ஐயா!

சென்னைமாகாண அரசியல் சபையில் தாங்கள் பொதுஜன சமூகப் பிரதிநிதியாக மறுபடியும் அங்கம்பெற்றுத் திருக்கருணை உள்ளங்கொண்டு இவ்வனம் விஜயம் செய்து அருளிய தங்களின் ஜனதன்ய வரவு நல்வரவாகுக.

சான்றோர் குலதிலக!

முன்முறை தாங்கள் மாகாண சட்டசபை பீடத்தமர்ந்த காலமுதற்கொண்டு பொதுவாய் இந்தியமக்களுக்கும்முக்கியமாய் விவசாயிகளுக்கும் புரிந்த பிரதி உபகாரத்தை எதிர்பாராததிகொண்டின் காரணமாய் இன்றும் மென்மேலும் உதவிசெய்து மேன்மைக்குக்கொண்டுவரும் பொருட்டு தங்களுக்கமைந்திருக்கும் பதவியில்வெற்றி பெறுவதற்கு கடவுள்வாழ்த்துகின்றோம்,

கருணை மிகுந்த கருணாகரா!

முத்தமிழ் நிறைந்த நம் நாட்டில் காலமாறுதலால் தமிழ்த் தாய் வாட்டமுற்றிருக்கிறதுறை நீக்கவேண்டி முன்னேற்றமடையாத ஜாதியார் முன்னேற்ற மடையத் தகுந்த வழியான கலாசாலை ஒன்றைப் பட்டிவீரன்பட்டியில் ஸ்தாபிக்க தங்களால் பிரயத்தனமும் பொருளுதவியும் செய்திருப்பது தங்களது பரோபகார சமத்துவம் முதலிய ஈகைக் குணங்களைத் துலக்கி தாங்களொரு கருணைமிக்க வள்ளலெனப் பிரத்தியக்ஷமாய்க் காண்பிக்கிறது.

விவசாயிகளுக்கோர் அவசியத் தலைவரே!

நமது இந்தியாவானது விவசாயமே பிரதான தொழிலாகக்கொண்டதால் விவசாயிகளின் வாழ்வு தாழ்வைப் பொறுத்தே நமது தேசத்தின் கதிமோக்ஷம். இதை உத்தேசித்தே தாங்கள் விவசாயிகளின் நல்வாழ்க்கையை மனதில் வைத்துச் சதா அவர்களுக்கு நன்மை செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறீர்கள். சுயநலங்கொண்ட சில ஐரோப்பிய வியாபாரிகளின் முயற்சியால்செய்யப்பட்டபருத்திச்சட்டத்தால்விவசாயிகளும் வியாபாரிகளும் பட்டகஷ்டத்தை உணர்ந்து அவர்களின் குறை நீங்குமாறு அந்தச் சட்டத்தைத் திருத்தியமைத்த தங்களின் சித்த வலிமையை நாங்கள் பாராட்டாமல் இருப்பதில்லை.

தண்ணிய மிகுந்த புண்ணியசீலரே!

இவ்வூரிலுள்ள யூனியன் போர்டிலுள்ள சட்ட சீர்திருத்தங்களையும், பாஸ்டு விஷயமாயுள்ள குடிகளுக்கு இருந்தும் கெடுதியாயுள்ள சட்டங்களையும், கம்போடியாப் பருத்திச் செடியை ஆவணி மாதத்தில் வெட்டுவதைப் புரட்டாசி மாதத்தில் வெட்டவேண்டி முடிவுக்குக் கொண்டுவரத் தங்கள்பால் ஜொலிக்கும் உதார குணத்தாலும் விடா முயற்சியினாலும் சளையா உழைப்பாலும் எந்பொழுதும் பொதுநலங்கருதிச் செய்துவரும் நன்மைகள் அனந்தம் உளதெனினும் அத்துடன் இப்பொழுது விவசாயிகளின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகச் செய்யும அரிய செய்கைகளையும்முயற்சிகளையும் எப்பொழுதும் மனதில் வைத்த வண்ணமாகவே இருப்போமாக. தாங்கள் ஜனோபகாரார்த்தமாகச் செய்யும் செய்ய இருக்கும சேவையை முன்மாதிரியாய்க் கொள்ளா நிற் நோக்கும் விவசாயிகளுக்கும் அபிமானிகளுக்கும் இதமான மார்க்கத்தில் முன்னேற்றமடையத் தக்கவழிகாட்டி மென்மேலும் அபிவிர்த்தியடையதற்போதம் கொடுக்கப்போதியசவ்கா சமும்ஆற்றலும்அளிக்கு மாறு சர்வவல்லமையுள்ள கடவுளை எப்பொழுதும்பிரார்த்தித்துக் கொண்டிருக்கும்.

தங்களன்பிற்சிறந்த
அய்யம்பாளையம் கிராமவாசிகள்.

ஸ்ரீமான்
P. T. ராஜன் B. A. (oxon)
Bar-at-law M. L. C, அவர்களுக்கு
அய்யம்பாளைய மகாஜனங்கள் வாசித்தளித்த

நல்வரவுப் பத்திரம்.

விருத்தம்.

சீர்புகழும் தமிழ்நாடு சிறப்புற்றோங்கி ஜெய
முறவே எம். எல். சி. தேர்தலுக்குப்
பேர்புகழும் பாளையநன் நகர்மேவும் பி. டி.
ராஜப் பிரபலரா மவரைத் தேர்ந்தோம்
தார்புகழும் ஆங்கிலத்தில், தேர்ச்சிபெற்றோன் தயவினொடு நம்குறையைத் தவிர்க்கும்வீ
பார்புகழும் தன்மையொடு பளருக்க [ரன்]
கிப் பகர்ந்திடுவன் சபைதனிலே பண்பு
ளானே.

ஊக்கமிகுந்த பாக்கியவந்தரே!

உடையரெனப்படுவதூக்கம் அஃதில்லாருடைய துடையரோமற்று என்ற திருவாக்குப்படி தாங்கள் விடாமுயற்சியுடன் படித்து ஆக்ஸ்போர்ட் சென்று B. A. பரிட்சையில் தேறிப்பாரட்லா என்ற பட்டம் பெற்ற தங்கள் மனவூக்கத்தை வியந்து தங்கள வரவேற்பை ஏற்று நாங்கள் பாராட்டுகின்றோம் பாரட்லாவாகிய காருண்ய சீலரே!

பொருளில்லார்க்கிவ்வுலக மில்லை என்றபடி அரிது அரிது அப்பொருளீட்டல் அரிதன்றோ? அங்ஙனமிருந்தும் தாங்கள் பெரும் பொருட் செலவிட்டுப் பெரிதும முயன்று படித்துப் பரிக்ஷையில் தேறி ஒரு பாரட்லா வந்தும்கூட அதான் வரும ஊதியத்தைப் பெரிதெனப்பாராட்டாது விவசாயிகளுக்கு பேருதவி புரிந்து வருகிற தங்கள் பெருந்தன்மையை யாங்கள் மிகபெரிதெனவும், அரிதெனவும், பாராட்டுகின்றோம்.

இந்துமதத்துக்கோர் முந்துபகாரரே!

உண்மையில் இந்தியர்களா யிருக்கப்பட்ட பல மேதாவிகளால் ஆதரித்துக் கொண்டு வரப்பெற்ற இந்துமதபரிபாலன தேவஸ்தான மசோதாவை எதிர்த்துக் சுயநலமும் பொறாமையும் கொண்ட ஓர் சாரார் செய்த சூழ்ச்சியையும் பொருட் படுத்தாது நின்று அதனை ஆதரித்து வெற்றிபெற்ற தங்களது பெற்றித்திறத்தை நமது தமிழ் நாடே தாங்கிப் பாராட்டுகின்ற தென்றால் யாங்கள் அதனை என்னென்று பாராட்டுதலன்றி ஒரு கணமேனும் கூட மறந்திருக்க முடியுமா?

விவசாயிகளுக்கோர் அவசியத் தலைவரே!

நமது இந்தியாவானது விவசாயமே பிரதான தொழிலாகக்கொண்டதால் விவசாயிகளின் வாழ்வு தாழ்வைப் பொருத்தே நமது தேசத்தின் கதிமோக்ஷம். இதை உத்தே

சித்தே தாங்கள் விவசாயிகளின் நல்வாழ்க்கையை மனதில் வைத்துச் சதா அவர்களுக்கு நன்மை செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறீர்கள். சுயநலங்கொண்ட சில ஐரோப்பிய வியாபாரிகளின் முயற்சியால் செய்யப்பட்ட பருத்திச் சட்டத்தால் விவசாயிகளும் வியாபாரிகளும் பட்டகஷ்டங்களை உணர்ந்து அவர்களின் குறைநீங்குமாறு அந்தச்சட்டத்தை திருத்தியமைத்த தங்களின் சித்த வலிமையை யாங்கள் பாராட்டாமல் இருப்பதில்லை.

சோகுணசல்லாதாரைப் பராமரிக்கும், கண்ணிய மிகுந்த புண்ணிய சீலரே!

சட்டசபையில் மும்முறையும் முதன்மையோட்டுகளால் தேர்ந்தெடுக்கப் பெற்றும், ஆறாண்டு காலமாகத் தாங்களொரு பிரதமமெம்பராயிருந்து வந்திருக்கிறபடியாலும் எங்களது குறை இவ்வூரிலுள்ள யூனியன் போர்டிலுள்ள சட்ட சீர்திருத்தங்களையும், பாரஸ்டு விஷயமாயுள்ள குடிகளுக்கு இருக்கும் கெடுதியுள்ள சட்டங்களையும், கம்போடியாப் பருத்திச் செடியை ஆவணி மாதத்தில் வெட்டுவதைப் புரட்டாசி மாதத்தில் வெட்ட வேண்டி முடிவுக்குக் கொண்டுவரத் தங்கள்பால் ஜொலிக்கும் உதார குணத்தாலும் விடாமுயற்சியாலும் சளையா உழைப்பாலும் எப்பொழுதும் பொது நலம் கருதிச் செய்துவரும் நன்மைகள் அனந்தம் உளதெனினும் அத்துடன் இப்பொழுது விவசாயிகளின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகச் செய்யும் அரிய செய்கையையும் முயற்சியையும் எப்பொழுதும் மனதில் வைத்த வண்ணமாகவே இருப்போமாக. தாங்கள் ஜனோபகாரார்த்தமாகச் செய்யும்செய்ய இருக்கும் வேலையை முன்மாதிரியாய்க்கொள்ள எதிர்நோக்கும் விவசாயிகளுக்கும் அபிமானிகளுக்கும் இதமான மார்க்கத்தால் முன்னேற்றமடையத் தக்கவழிகாட்டி மென்மேலும் அபிவிருத்தியடைய நற்போதம் கொடுக்கப் போதிய சாவகாசமும் ஆற்றலும் அளிக்குமாறு சர்வவல்லமையுள்ள கடவுளை எப்பொழுதும் பிரார்த்தித்துக்கொண்டிருக்கும்.

தங்களன்பிற்சிறந்த
அய்யம்பாளையம் கிராமவாசிகள்.

திராவிட சங்கம், போளூர்.

16-5-27ல் இவ்வூரில் மயிலை இரத்தின சபாபதி முதலியார் "காங்கிரஸ் நோக்கம்" என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசுகையில் திராவிட சங்கத்தையும் அதன் தலைவர்களையும் தாக்கிப் பேசினர். அதுசமயம் அங்கு விஜயம் செய்திருந்த திராவிட சங்கத்தின் எக்சிகியூடிவ் மெம்பரும் உதவி காரியதரிசியும் வித்வானுமாகிய A. T. அரங்கசாமி நாயகரவர்கள் நான் சில நியாயமானகேள்வி கேட்கிறேன், தாங்கள் பதில்சொல்ல முடியுமாவென்றார். கடிதத்தில் கேள்வியை எழுதிக்கொடுக்கவேண்டுமென்று முதலியார் சொன்னார். - பேசத் தெரியாதவர்கள் தான் எழுதிக்கொடுக்கவேண்டும், நான் எத்தனை மணி நேரமானாலும் பேசத் தயாராயிருக்கிறேனென்று நாயகர் வலுவாக நின்று கேட்டவுடன் முதலியார் உடம்பு சௌக்கியமில்லையென்றும் நெடுநேரம் பேசமுடியாதென்றும் சாக்குப்போக்குச் சொல்லி உட்கார்ந்துகொண்டார். உடனே ஜனங்கள் ஒவ்வொருவரும் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லமுடியாத பிரசங்கியார் பிரசங்கம் சாரமில்லையென்று கூறிவிட்டு கைதட்டிப் பரிகசித்துக்கொண்டு கலைந்துவிட்டார்கள். திராவிட சங்க மெம்பர்கள் தலைவர்களுக்கு ஜே போட்டுக்கொண்டு சங்கத்திற்கு சென்றனர்.

நமது குற்றமல்ல

இதுவரை சந்தா நேயர்கள் அடிக்கடி தங்களுக்குப் பத்திரிகை குறித்த காலத்தில் கிடைக்காது மூன்று நான்கு நாள் தவக்கப்பட்டுக் கிடைக்கிறதென்பதாக நமக்கு எழுதியிருக்கிறார்கள், அதைக் கண்ணுற்ற நாம், நமது ஆபீஸில் யாதொரு தவக்கமுமன்னியில் ஞாயிற்றுக் கிழமைகளிலேயே பத்திரிகைகளை தபாலுக்கு அனுப்பிவிடுகிறோம். அப்படியிருந்தும் பத்திரிகைகள் சுணங்கிக் கிடைக்கின்றன என்று எழுதுகிற இம்மாதிரி புகார்களுக்காக நாம் விசனப்பட்டதுண்டு. இதுவரை குற்றம் யார் மீது இருந்தது என்று தெரியமுடியாமலிருந்தது. ஆனால் சமீபத்தில் பரிசீலனை செய்து பார்த்ததில் பிரதி வாரமும் R. M. S. ஆபீஸில் நமது பத்திரிக்கைகளை 2 நாள், 3 நாள்கள் கூட அனுப்பாமல் கட்டிப் போட்டு விடுவதாகவும், தங்களுக்கு இஷ்டமுண்டான போது அனுப்பி வருவதாகவும் தெரியவந்தது. இந்த விபரம் தெரிந்து அவர்களைக் கேட்டால் இப்படித்தான் அனுப்ப முடிகிறதென்றும், அதற்காக எங்குவேண்டுமானாலும் பிராது சொல்லிக் கொள்ளலாம் என்றும் தைரியமாய் பதில் சொல்லிவிட்டார்கள்.

அல்லாமலும், நமது பத்திரிகை பொதுவாக ஒரு சாராரின் கண்ணுறுத்தலின் பேரில் நடந்து வருகிறதென்பது நேயர்களுக்கு நாம் சொல்லாமலேயே விளக்கும். எனவே அந்த ஒரு சாராரின் ஆதிக்கத்திலுள்ள உத்தியோகப் பொறுப்பு வாய்ந்த ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் நமது பத்திரிகைக்கு இடையூறு ஏற்படுவதும் மிகையாகாது. எனவே அவர்களால் இது தவிர இன்னமும் நமது பத்திரிக்கையின் விஷயத்தில் தங்களால் எவ்வளவு இடையூறுகள் செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்தே வருகிறார்கள். இதைப்பற்றி நாம் அவ்விலாகா அதிகாரிகளுக்கும் எழுதியிருக்கிறோம் ஆதலால் சந்தா நேயர்கள் இனி பத்திரிகைகள் தவக்கப்பட்டு கிடைக்கின்றன என்ற பழியை எம் மீது சுமத்தாமல் அவ்விலாகா தலைவர்களுக்கு எழுதிக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

விவசாயிகளுக்கோர் விண்ணப்பம்

ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

சகோதரர்களே விவசாயத் தொழிலுக்கு மேலான தொழில் யாதொன்றும் இல்லை என்பது யாவரும் அறிந்த விஷயம் மற்ற பணிகளுக்கு அழிவு உண்டு. அல்லாமலும் அநேகருடைய உதவிகளும் வேண்டும். இவ் விவசாயத்தொழிலுக்கு எவ்விதத்திலும் கெடுதி இல்லை. தவிர விவசாயத்தால் வரும் ஊதியத்தில் எண்ணிறந்த ஜீவாத்மாக்கள் உண்டு பிழைக்கின்றன அன்றியும்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாந் தொழுதுண்டு பின் செல்வர்."

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார் தவிர அநேகர் அநேக தொழில்கள் செய்து பிழைக்கின்றார்கள். அவைகளுக்கு அழிவு எவ்விதத்திலும் உண்டென்பதும், பொய் முதலியவைகள் சொல்லவேண்டுமென்பதும் யாவரும் அறிந்த விஷயம். இதை உத்தேசித்தே ஔவை, கம்பர், திருவள்ளுவர், முதலான வித்வசிரோன்மணிகள் சிலாகித்து பாடியுள்ளார், நண்பர்களே! பாருங்கள்! நெற்றித்தண்ணீர் நிலத்தில்விழுக பாடுபட்டு அதனால் பயனை நல்வழியில் செலவு செய்யாமல் அநேகர் தான் பிடித்தது பிடிவாதமென்று தங்கள் நிலைமையை மறந்து கோர்ட்டே கோவிலாகவும் நியாயாதிபதியே தெய்வமாகவும், பார்ப்பனானவக்கீல்களே மந்திரம் ஜபிக்கும் அர்ச்சகர்களாகவும், பொய், புரட்டுகளுதுமுதலியனவே நைவேத்திய தாம்பூலம் புஷ்பங்களாகவும் கொண்டு போய், கைப்பொருளை யெல்லாம் தோற்று கேவலமான ஒட்டல் சாப்பாட்டை பிரசாதம்போல் கிரகித்து கடைசியில் தன் பெண்டு பிள்ளைகளின் நகையையும் தாலி முடிய விற்று செலவு செய்து ஓட்டாண்டியாகி தெருத் தெருவாய் அலைகின்றார்கள்.

நண்பர்களே! யோசியுங்கள் ஓர் பொய் சொல்ல மாட்டாமல் தான் நாடு, பரிவாரம், சுற்றத்தார் முதலானவர்களையும் இழந்து தானும் தன் மனைவிமகனுடன் விலைப்பட்டு துன்ப முற்று தன் வடிவு குன்றினன் அப்படியிருக்க நாம் மேலான விவசாயத்தொழிலைச் செய்து நல்வழியில் செலவிடாது, ரோஷம் பாராட்டி கோர்ட்டுக்குப்போய் அச்சண்டாள பார்ப்பன வக்கீல்கள் சொல்லிக்கொடுக்கும் பொய், புரட்டு, சொல்லி, அநேக விவசாய நண்பர்களும் மற்ற ஆரிய நண்பர்களும் அவஸ்தையடைகின்றார்கள்.

மெய் சொல்லி வாழாதான் பொய்சொல்லி
வாழ்வதில்லை.
சாக்ஷிக்காரன் காலில் விழுவதைவிட சண்
டைக்காரன் காலில் விழலாம்.

சகோதரர்களே! ஒரு பணியாரம் திருடிய இரண்டு பூனைகளுக்கு நியாயம் செய்ய வந்த குரங்கைப் போல் வக்கீல்களை நினைத்து நாம் அந்த பூனைகளாக வைத்து எத்தனை வல்லவராயிருந்தாலும், ஐசுவரியவந்தராயிருந்தாலும் கோர்ட்டுக்குபோவதை நிறுத்தவேண்டுமென்று ரொம்பவும்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முத்துநாகு கவுண்டர்.

(4ம் பக்கத் தொடர்ச்சி.)

சைந்த அரசர்களையும் இருந்த விடந்தெரியாது மறைந்தழிந்து போகுமாறு செய்தார்கள். இப்போது யார்குடியைக்கெடுத்து வருகின்றார்களென்பதை பின்னால் விளங்குவதும். இதற்குச்சான்றாக, "பார்ப்பானுக்கு மூப்பான் பறையன் கேட்பாரின்றி பறையனானான்".

இனி இவ்வாறு கிடக்க நல்லறிவினாலும் நல்லியக்கங்களினாலும், நற்செய்கைகளினாலும், கடவுட்பாற் செலுத்திய அன்பினாலும்உயிர்களினிடத்தில்வைத்த இரக்கத்தினாலும்உயர்ந்தோரேஉயர்ந்தவரெனப்படுவரின்றி ஏனையோர்மேற்சாத்திய இலக்கணங்களுக்குமுரண்பட்டமாட்டித் தம்மைத் தாமேஇறுமாந்து உயர்ந்தோரெனப்படும்படி கூறில் அவர் அங்ஙனம் உயர்ந்தவரெனப்படமாட்டாரென்பது எச்சமயத்தாரும்ஒப்புக்கொள்ளும் ஓர் சம்மதம். இனி ஊனுடம்பை ஒரு சுமையாகக் கொண்டுழலும் இவ்வகை மாந்தர்கள் தம்மைத்தாமே தேவரெனவும், பார்ப்பனரெனவும் உச்சிமேல்வைத்து ஒருபெரிதாக பாராட்டினாலும் தம்மொழியில் அவதூறு கட்டிப்புனைந்து பல சூழ்ச்சிக்கோடாக எம்மனோரால் அவைகளை ஏற்குமாறு காட்டி பழக்க வழக்கத்திற்குக் கொணர்ந்தாலும் கல்வி கேள்விகளிற் சிறந்தொழுகா நிற்கும் மயக்க மெய்தினர்மாத்திரம் இங்ஙனம் ஏமாற்ற மடைவரேயன்றி, ஏனையோர் சிறிதளவேனும் ஏமாந்து போகமாட்டார் என உன்னி நால் கூறு நிற்கும் ஆற்றேல் தம்மைத்தாமே தற்புகழ் கொண்டு இறுமாந்து விலாப்புடைக்கத்தின்றுழலுவான் வேண்டி திரியும் பார்ப்பனக்கூட்டத்தார் தம்மைத் தாமே பார்ப்பனர், பிராமணர் என்று வற்புறுத்திக்கூறி அழைக்கில் அக்கூட்டத்தார் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து ஓர் இயல்பாய் இருக்கவேண்டுமன்றோ?

இனித் தென்னிந்தியாவிலுள்ள பார்ப்பனர், வட இந்தியாவிலுள்ள பார்ப்பனரை அவர்கள் மாமிசம் புசிக்கின்றார்களாகையால் அவர்கள் சூத்திரரேயன்றிப் பார்ப்பனராக மாட்டார் என்று புகல்கின்றனர். இனி வடநாட்டிலுள்ள பார்ப்பனரோ நாங்கள் வேதங்களிலும், ஸ்மிருதிகளிலும் கூறியபடி புலாலுணவு உண்டு சாத்திர விதிப்படி நடக்கிறோம். ஆனால் தென்னாட்டிலுள்ள பார்ப்பனர் சாத்திரத்திற்கு விரோதியாய் தென்னாடுடைய சைவரின் தந்திரத்தினால் தாக்குண்டு சைவ ஆசாரப்படி நடப்பதால் அவர்கள் சூத்திரரேயன்றி பார்ப்பனராக மாட்டார் என்று சொல்லுகின்றனர். இனி தென்னாட்டிலுள்ளும் மலையாளத்திலுள்ள நம்பூரிப் பார்ப்பனர்கள் தென்னாட்டிலுள்ள பார்ப்பனரைத் தங்கள் திண்ணையிற்கூட குந்தவிடாது அவர்கள் சூத்திரரென்று வெருட்டுகின்றனர். இனித் தமிழ்ப்பார்ப்பனரோ அவர்கள் நாயரென்னும் சூத்திரப் பெண்களை வைப்பாட்டியாக வைத்துப் பாவிக்கின்றபடியால் அவர்கள் சூத்திரரேயன்றிப் பார்ப்பனராகார் என்கின்றனர். இனி இந்தியாவிலுள்ள பார்ப்பனர் இலங்கையிலுள்ள பார்ப்பனர்களுடன் உணவு அருந்த மறுத்து அவர்கள் சூத்திரரேயன்றிப் பார்ப்பனராகமாட்டாரென்று சொல்லுகின்றனர்.

இனித் தமிழ்நாட்டாரவர்களுள்ளும்சுமார்த்தப் பிராமணரென்போர் ஐயங்கார் பார்ப்பனர் சூத்திர வகுப்பிற் பிறந்தவரென்று ஒதுக்குகின்றனர். இனி ஐயங்கார் பார்ப்பனரோ தமது வீட்டுத் திண்ணையிலும் ச்மார்த்தரிருந்தால் அது தீட்டுப்பட்டுப் பட்டுப் போமென்று சொல்லி ஒதுக்குகின்றனர். இனி கன்னடம், தெலுங்கு முதலிய நாடுகளுடைய மார்த்துவப் பார்ப்பனரென்போர் மேற்குறித்த ச்மார்த்தர்களையும் சூத்திரரேயன்றி அவர்கள் பார்ப்பனராகிவிடமாட்டாரென்று சொல்லுகின்றனர் இனி ச்மார்த்தர்களுள்ளும், ஐயங்கார்களுள்ளும் பற்பல பிரிவுண்டு. ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினருடன் உணவருந்த ஒத்துக்கொள்ளாது மறுக்கின்றனர். ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை பார்ப்பனரென்று ஒப்புக்கொள்ளுகின்றனரில்லை, இனி சிவபிரான் கோவில்களிலும், திருமால் முதலிய கோவில்களிலும் பூசையே தொண்டாகப் புரியும் பார்ப்பனரை மேற்கூறிய எல்லாப் பிரிவினரும் ஒன்று சேர்ந்து அவர்கள் சூத்திரரென்று ஒரு முகமாகக் கூறுகின்றனர். இவ்வாறாக ஆங்காங்கு தம்மைத் தாமே பார்ப்பனரெனச் சொல்லிக்கூறும் இச்சிறு மக்கட் கூட்டத்தாருள் இன்னவர் தாம் பார்ப்பனரென்று உறுதிப்பாடு அவர்களுக்குள்ளேயே தோன்றக் காணாமையாயின் இவர்களுள் எவரும் பார்ப்பனரல்லவென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தோன்றாநிற்கும். இத்தகைப்போன்ற பார்ப்பனர் தாங்கள் பிர்மாவின் முகத்திலே தோன்றினவரென்று கூறுதல் உண்மையாயின் இவர்கள் தமக்குள் வேற்றுமை வேறுபாடின்றி எல்லோரும் ஓரே இனத்தவராய் இருத்தல் வேண்டுமன்றோ? ஆற்றேல் பிரமா ஒருவரைக் காலினின்றும் ஒருவரை முகத்தினின்றும் தோற்றுவிப்பாராகில் அது கடவுட்டன்மைக்கு முரணாகனின்று படைத்தவரே வஞ்சகரெனப் படுவாரன்றோ! இனி படைத்தற்றொழிலையே மேலாகவுடைய பிரமதேவன் தான் ஒருவரை முகத்தினின்றும் தோற்றுவிப்பாராகில் தோன்றியவர் மிகவும் அளவுடாத உத்தம நிதியில் சிறந்து விளங்கி பிர்மாவின் கீர்த்தியையும் அவர் முகத்தின் அருளொளியையும் நின்று விளக்கி யாவரும் பார்க்குமிடத்தில் ஏங்கி மயக்கமடைவரன்றோ? பிர்மாவின் முகத்திலின்று தோன்றினது உண்மையாயின் அவர்கள் பஞ்சமாபாதகத்திற்கிடாக சிறைசேர்தல், கன்னக்கோல் வைத்தல், பிள்ளைகளைக் கொல்லுதல், கள்ளு முதலிய வாகிரியருந்தல்; காமம் முதலாகிய கொடும் தொழில்செய்ய இசைந்தால் அவர் முகத்தில் தோன்றினதற்கும் படைத்தவர்க்கும் என்ன பெருமை காண்கின்றது என்பதை பெரியோர்களே உற்று யோசியுங்கள். இனி பசி தாகங்களும் விருப்பு வெறுப்புக்களும், ஒன்பது வாயினின்றொழுகும் மலங்களும், நரை திரை மூப்பு பிணி சாக்காடு முதலிய செய்கைகள் அவர்கள்மீது இல்லாமல் காண்டல் வேண்டுமன்றோ? தேவரிற் கடைப்பட்டவர்களிலுள்ள ஒரு சிறிதுடையாளமுமில்லாய்த் தம்மைத்தாமே மேலோரெனக்கூறி ஏனைய மக்களனைவரையும் வேசி மகன், மூடர், அடிமைக்காரரெனப் பொருள்போந்த சூத்திரப் பெயர்வைத்து இழிவாய்ப் பேசுவதில், வேறுமொரு அகந்தை அகங்காரம் கொடுமை உண்டோ சாற்றீர்? இத்தகைய நெட்டூரத்திற்கு ஈடாகக் கொண்டொழுகும் கலிகால, நூதன பேடண, சால, விபரீத ஆரியப் பேய்கள் காட்டும் செயலை உணர்ந்த ஆசிரியர் திருமாளிகைத் தேவர் பன்னிரு திருமறையின் திருவிசைப் பாவிற்

"திசைக்குமிக் குலவுசீர்த்தித் தில்லைகூத்துகந்து
நசுக்கவெண்ணீற தாடும்நமர்களை நணுகாநாய்க
ளசிக்கவாரியங்களோது மாதரைப் பேசுவாதப்
பிசுக்கரைக் காணக்கண்வாய் பேசாதப் பேய்க
ளோடே"

இவ்வாறே சைவசமய ஆசிரியராகிய திருநாவுக்கரசு நாயனாரும்,

"கோலும் புல்லும் ஒருகையிற் கூச்சமுந்
தோலும் பூண்டு துயரம்உற்று என்பயன்
நீலமாமயிலாடு துறையனே
நாலும் வேண்டுமோ நுண்உணர்ந்தோர்கட்கே"

இங்ஙனம் திருமூல நாயனாரும்

"சத்தியம் இன்றித் தனிஞானந்தானின்றி
ஒத்தவிடயம் விட்டு ஒரும் உணர்வு இன்றி
பத்தியும் இன்றிப்பரன் உண்மை இன்றிஊன்
பித்தேறும் மூடர் பிராமணர்தாம் அன்றே"

இவ்வாறு அருளிச்செய்தமையாலும் கண்டு தேறுக. இக்காலத்தில் சிறந்த ஏதுவுமின்றி எல்லாக்குற்றம் உடையவராய தம்மைத் தாமே பிர்மாவின் நெற்றியில் தோன்றினோமென்று புகழ்ந்துபேசிக் கொச்சலி கொட்டியாடும் பார்ப்பனோர் தாம் தாமே பாடுபட்டு பணந்தேடாமல் நெற்றி வேர்வை வடிய வேலைசெய்து பாடுபட்டுத் தேடும் பொதுமக்களை தங்கள் சூழ்ச்சிகளினால் ஏமாற்றி பொருள் பறிக்கும் நோய் அது கண்டு மக்கள் நாகரீகத்திலும் ஏனைய துறைகளிலும் முன்னேற்றமடையாது அவர்களை எல்லாம் மிகவும் இழிவான சூத்திரப் பெயர் கொண்டழைத்த ஈர நெஞ்சம் சிறிதுமில்லராய் இருத்தலின் இவர்கள் உண்மையாகவே பார்ப்பனரல்லவென்பதும் முகத்தில் நின்று விழுந்தவரல்லவென்பதுவும் பிறரைக் கேட்காமலே அறியலாமன்றோ இதையறியாது அவர்கள் காட்டும் விகட வித்தைக்கு மயங்கி அவர்களுக்குச் சிறப்புச் செய்தலைத் தொண்டாகவுடைய மனிதரின் கூற்று ஒரு கலிகாலப் பேதமாமென்றறிக.

காலத்தை நோந்து பார்ப்பனர் கோட்டாவிவிடுதல்

மக்களெல்லாரும் எண்ணிறந்த நன்மைகளைப் பெற்று அளவளாவி உயிர்களிப்புடன் வாழும் இச்சிறந்த காலத்தைத் தம்மைத் தாமே பார்ப்பனரென இறுமாந்து அழைத்துக்கொள்ளும் இச்சிறு கூட்டத்தார் இது கலிகாலமென இழித்துப்பேசி வாய்ப்பறை முழங்கி வருகின்றார்கள். இப்பார்ப்பனர் தம்மைத்தாமே தேவரெனச் சொல்லிக்கொண்டால் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகமெய்தலாமே? ஆனால், இவர்கள் உண்மையில் தேவர் அல்லாமையாலும் கூற்றுவன் உதவியின்றி விண்ணுலகத்திற்குச் செல்லுதலியலாமையாலும் தம்மைத்தாமாகவே உயர்த்தி வைத்துக்கொள்ளும் வண்

(14ம் பக்கம் பார்க்க.)

(13ம் பக்கத் தொடர்ச்சி.)

னம் ஏற்ற ஓர் சூழ்ச்சிக்காகவே இக்காலத்தைப் பழித்துப்பேசும் மூலகாரணமென்றறிக. அதாவது, "ஆடமாட்டாத தேவடியாள் வாசல்வழி கோணல்" என்னும் பழமொழி போற் விளம்பி தான் நின்றாடுவதற்குப் புகுந்த இடத்தைப் பழித்துப் பேசுதல் என்றால் மட்டுமே தனக்கு ஆடுந்திறம் உண்டென்று உறுதிப்படுத்த விரும்புதல் போல் பார்ப்பனரும் தாம் செய்யும் ஏமாற்றங்களெல்லாம் இனி பயன் படாததுகண்டு இக்காலத்தை கலிகாலமென்றும் இதின் கண்ட உயர்ந்த அறிவு நிகழ்ச்சிகளைக் கலிகாலப் புதுமைகளென்றும் இகழ்ந்துபேசி ஆரவாரம் செய்யாநிற்பர்.

கொடும் பார்ப்பனரால் காலம் கலிகாலமாயிற்று.

இனி காலமென்ற நிதற்கு ஐயுங்காது மறிவுமில்லாமையின், அதுதானே நல்ல தொன்றையேனும் தீயதொன்றையேனும் செய்துவிடமாட்டாது. அவ்வக்காலங்களில் இருக்கும் நன்மைகளையும் தீமைகளையும் மறுபடி உயிர்வாழுங் காலத்தில் மேலேற்றி விடுபவர் ஒருவருண்டு. ஆகையின் ஒரு காலத்தை நல்லதென்றும் கூடாதென்றும் பேசுவதில் எஞ்ஞான்றும் பயன்படாது. இக்காலத்தில் எவர்களுடைய செயல் நன்மை என்றும் எவருடைய செயல் தீமையென்றும் விசாரிப்போமானால் உண்மை விளங்கும்.

நம இந்தியா இலங்கை என்னும் பிரிவில் வாழாநிற்கும் மக்கள் பெரும்பாலும் இச் சிறு பார்ப்பனக் குழுமர் சிறுமைகள் விரித்து வீசும் கண்ணை வலையிற் ஆங்காங்கு சிக்குண்டு கல்வி, செல்வம், ஒற்றுமை திடவீரம் என்பன இல்லாய் முன்னிருந்த வறுமை எல்லாம் குன்றிக்குன்றியும் தாம் வருந்தித் தேடிய பொருள் எல்லாவற்றையும் இங்ஙனம் அலங்கோலங்கொண்டு கிரித்தாடும் பார்ப்பனப் பேய்களுக்கு வேண்டியவாறு இறைத்து வழியாய் பிறர்க்கு ஒரு நன்மை அறைபுகுந்து காட்டுவான்வேண்டி பொருள் அற்றவராய் ஏழைச் சிவனத்துடன் நின்றொழி வருவதைக் குருடனும் பார்த்து கண்கு தெளிவானன்றோ? இத்தகைய கொடுஞ்செயலுக் கீடாக பண்டை பாவணியாய் எமமனோரைத் துயரப்படுத்தி அவர்கள் காணி, பூமிகளையும், மடம், சாவடி, கோவில் திண்ணை, தெரு, கிணறு, குட்டை, ஆறு, மாடு, பண்டம், பாண்டம் முதலிய பொருள்களெல்லாம் பல்வேறு சூழ்ச்சி தந்திர நிகழ்ச்சியினால் அபகரித்துத் தின்று பல்லெல்லாம் வரிசைப்பட்டது போதாது. இராஜ்யத் துறைகளிலும், ஏனைய அழுக்கூறும் துறைகளிலும் தோய்ந்து எமமனோர்க்கு எங்கணும் இது ஒரு பெரும் இடராய் நின்று கற்பாறை போற்றென்று நிற்கின்றதேயன்றி வேறென்ன? நமமக்களிற் சிலர் நல்லுணர்வு, நல்லாராய்ச்சி, நல்லிரத்தம் வாய்ந்தொழுகும் ஆற்றல் இல்லாய்த் தம் இரத்த உரிமையையும் பிறழவிட்டு, ஏனைய சிறுண்டுலாவும் பேய்கள் வைதும் எஞ்சச் சுவாலையார் தாக்குண்டு தாமும் அவர்களுக்குத் தொண்டனாய் நின்று தம் தமிழ் இனத்தவரை வேரறுக்கும் கருவியாய் நின்று

கோயமுத்தூர் ஸர்வஜன ஹைஸ்கூல் ஹாஸ்டலில் சேருவதற்கான விதிகள்.

(1) சேருவதற்கான விண்ணப்பங்களை ஒவ்வொரு வருடத்திலும் ஜூன் மாதத்திற்குள் ஹாஸ்டல் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

(2) விண்ணப்பம் குறித்த பாரத்திலிருக்க வேண்டும்.

(3) ஷை பாரம், ஹாஸ்டல் மானேஜர் ஆபீஸிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(4) ஒவ்வொரு மாணவனும், சேரும்போது ஹாஸ்டலுக்கு முன்பணம் ரூ. 20 இருபது ரூபாய் கட்டவேண்டும். ஷை முன்பணத்தை விலகும் போது திருப்பிக் கொடுக்கப்பெறும்.

(5) ஹாஸ்டலில் சேர்ந்த மாதத்திலிருந்து, ஒவ்வொரு மாதத்திற்கும், முதல் தேதியில் பில் (Bill) போடப்பெறும். ஷை பில்லுக்கு இரண்டு வாரத் தவணைக்குள் பணம் செலுத்தவேண்டும். குறித்த கெடுவில் பணம் கொடுக்கத் தவறினால், அந்த மாணவனுடைய முன் பணத்திலிருந்து ஈடு செய்வதோடு, மேற்படி மாணவனை அந்தத் தேதியிலிருந்து ஹாஸ்டலினின்றும் விலக்கப்படும்

(6) 19, வயதிற்குமேற்பட்ட மாணவனையும், 10, வயதிற்குட்பட்ட மாணவனையும் சேர்த்துக் கொள்ளப்பெறமாட்டாது.

குறிப்பு:—வயதைக்குறித்த (6)-வது விதி பழைய மாணவர்களைப் பாதிக்காது.

நோக்கங்கள்.

(1) படிக்க விரும்பும் மாணவர்கள், வெளியூர்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும், வருபவர்களை ஹாஸ்டலில் ஏற்படுத்தியுள்ள நிபந்தனைகளின் படி, பெற்றோரின் அநுமதியின்பேரில், (ஷை மாணவர்களைச்) சேர்த்துக்கொண்டு, ஒழுங்கமாக விருத்தியடையும் வண்ணம் உணவு முதலிய வசதிகள் செய்து கொடுத்துக் கல்வி கற்பித்து வருவதும்,

(2) ஹைஸ்கூல் மானேஜர் P. S. G. ரங்கசாமி நாயுடு அவர்கள், ஏழை மாணவர்களென்று அபிப்பிராயப்பட்டு ஹாஸ்டலுக்கு அனுப்பினால் அந்த மாணவர்களுக்கு இலவசமாகவே சகல வசதிகளும் செய்து கல்வி கற்பித்து வருவதும்,

(3) ஹாஸ்டலில், வசித்து, வாசிக்கும் மாணவர்கள் அனைவரும் யாதொரு பேதமுமின்றி, தாங்கள் இந்தியர்கள், இந்திய ஜாதியினர் என்ற உயர்ந்த உண்மையான உணர்வோடு, உண்டு உடுத்திப் பழகி எல்லாரும் சகோதரர்களாகப் பழகுவதும்,

(4) மேலே குறித்த நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்குரிய வேறு எல்லாக் காரியங்களைச் செய்வதுமேயாகும்.

குறிப்பு:—ஹாஸ்டலில் மாணவர்களுக்குப் பிரதி தினம் மூன்று வேளை உணவும், சனிக்கிழமை தோறும், அப்யங்கஸ்நானம், பட்சண பலகாரங்கள் முதலியனவும் அளிக்கப் பெறும். தவிர, தீபம், வண்ணான் நாவிதன் முதலிய சகல வசதிகளும் செய்வதோடு, வாரந்தோறும் வைத்ய பரிசோதனையும் நடைபெற்று வரும்.

மேலே குறித்த சகல வசதிகளுக்குமாக மாதம் 1-க்கு பிரதி மாணவனும் செலுத்தவேண்டிய கட்டணம் ரூ. 11—0—0 பதினொன்றுமாத்திரம்.

மேலும், மாணவர்களைக் கவனித்து வருவதற்காக ஹெட்மாஸ்டர் அவர்கள் ஹாஸ்டலிலேயே வசித்து வருகின்றனர்.

உறுதி மொழி.

நான், ஷை, விடுதியில் சேருவதின் நிபந்தனைகளுக்குட்பட்டு அடியில்கண்ட கடமைகளின்படி நடக்கச் சம்மதிக்கிறேன்.

(1) விடுதியின் ஒழுக்கத்தைப்பற்றி எல்லா விதிகளின்படியும் நடக்கச் சம்மதிக்கிறேன்.

(2) நான் ஹாஸ்டலில் வசித்து, வாசிக்கின்ற வரையிலும் பிரம்மசாரியத்தை அனுஷ்டிக்கவும், கலியாணம் செய்துகொள்ளாமலிருக்க ஒத்துக் கொள்கின்றேன்.

[3] நான் எப்பொழுதும், எனது நடத்தையினால் விடுதியின் முக்ய நோக்கத்தை விளக்கிக் காட்டுவேன் என்ற உறுதி மொழியில் கையெழுத்திடுவதுடன்,

விண்ணப்பதார் [1] பெயர் [2] வயதும், பிறந்த தேதியும், [3] பிறந்த ஊர் ஜில்லா, [4] ஜாதி மதம், (5) தந்தை அல்லது இரக்ஷகரின் பெயர் [6] வாசிக்கும் வகுப்பு, [7] முழு விலாசம், [8] சொத்தின் மதிப்பு, [9] குடும்பத்தில்சம்பாதிக்கின்றவர்களின் பெயரும் வரும்படியும், ஆகிய விபரங்களடங்கிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து மாணவரின் கையொப்பமும், தன் தந்தை அல்லது இரக்ஷகரின்கையொப்பமும்வாங்கி P. S. கோவிந்தசாமி நாயுடு & சன்ஸ் தர்மஸ்தாபனம் சர்வஜன ஹைஸ்கூல் ஹாஸ்டல் மானேஜருக்கு அனுப்பவேண்டும் என ஷை தர்மஸ்தாபன காரியதரிசி அறிவிக்கிறார்.

அவர்களுக்குத் தக்கவாறு பயனூட்டி ஆரவாரம் செய்தவரும் இவ்வகையோர் உடம்பிற் சிறு துளி நல்லிரத்தமும் உரிமை முறை கண்டு சிந்தாததால் இவர்கள் உடம்பு முற்றிலும் துன்புறுநீரினால் வகனும் சூழப்பட்டு உடம்பை ஒரு சுமையாகக் கொண்டுழலும் ஊமற்போற் தோன்றுகின்று தனக்கும் பயன்படாது தன்னினத்தார்க்கும் பயன் படாத கடற்றுறை என்றே குறிப்பாற் கண்டு மேல்நாட்டாரும் அறிந்திருக்குமோர் விடயமென்க. ஆகையால் இவ்விடர் எஞ்ஞான்றும் ஒரு முட்டுக்கட்டையாய்த் தோன்றும் இப்பார்ப்பனோர் தீய செயல் சிறதளவேனும் நம் தமிழ் மக்களை நனுகா வண்ணம் காப்பாற்றுவான்வேண்டி ரோசம் வெட்கம், வீரம், அபிமானம், உரிமை, கடமை முதலிய நற்குணங்கள் வாய்ந்த வீரசூரர் எமதுநாட்டிலுதித்து அஞ்ஞானமென்னும் பார்ப்பனிருளை யகற்றி மெய்ஞ்ஞானமாகிய சுதந்திரத்தை நாட்டி சூரியபானு போற்றுலங்கும் காலெளன்னாளே?

இந்நாளில் முற்றுறுதோ பெரியீர்! இதற்கு சிறுகுழந்தை தன்னும் இனிமேற்றோன்றுனே சபையீர்!

சென்னை பழையவண்ணாரப் பேட்டை நெ. 1. எமித்தெருவு ப்ருதிவீச்சுரர் ஆஸ்ரமம் ஆத்மலாப விளக்கசங்கம் ஆசிரியரும், கன்னல் மொழி பௌராணிகரும், மஹா மஹா க்ஷத்திரிய குல புராண நூலாசிரியரும், சௌக்கார் செவலூர் கருப்பண்ணஞ்செட்டியார் குமாரரும் முத்தமிழிலக்கண வல்லாருமான ஸ்ரீ அங்குசாமி செட்டியார் அவர்கள் 13-5-27-ல் சாக்ஷாத் கார சொருபத்தில் ஐக்கியமடைந்ததால் ஷை சங்கத்தார்கள் அவரது பிரிவாற்றுமைக்கு முழுமனதோடு மனம் கசிந்து எல்லாம் வல்ல இறைவன் செயலையும் மன்றாடி ஆசிரியர் பிரிந்த ஆற்றுமையைச்சகிக்க முடியாதவர்களாய் வருத்தம் பாராட்டுகிறார்கள்.

2ம் பக்கத் தொடர்ச்சி

'கல்யாணி' என்னும் குளத்தில் பேதமறசென்றும் தொழுதும் குளித்தும் வருவதை பிரதிவருடமும் உத்சவத்திற்கு செல்லுபவர்களே, இதுகளெல்லாம் எட்டில்தானே யெழுதப்பட்டது நாட்டில் நடவடிக்கைகளில் உண்டோவென்றும் சந்தேகத்தை நிவர்த்திக்குமாறு ப்ரத்யக்ஷமாகக்காணலாம்படி நமது பெரியாராகிய ராமானுஜரே செய்து வைத்திருக்கிருர். இன்னம் வடநாடுகளை இதற்கு உதாரணமாக அனேகமாக சொல்லலாம் விஸ்தரபயத்தாலிம் மட்டோடு விட்டு விட்டனம். ஆகையால் சுருதி சொல்லுகிற கடவுளிடத்து இத்தகைய பேதங்கள் இல்லாதிருப்பதை அவரது 5 ஸ்வரூபங்களிலும் காணப்படது என்பது நிரூபிக்கப்பட்டது.

இனி யுக்தியைப்பற்றி ஆராய்வாம் யுக்தி என்பதின்னதென்பதை முன்னமேயே சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட யுக்திக்காவது ஜாதிப்பான்மை ஒத்து வருகிறதாவென்ருல் ஒத்துவருவதை நாம் உலகில் காண்பதில்லை: எப்படியெனின் மனிதனுக்கு மனிதன் அவயவங்களில் வேறுபாட்டை ஒரு விதத்திலும் காணுகிறதில்லை. அதாவது தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லப்படுவோர்க்கு எத்தனை கைகள்? எத்தனை கண்கள்? எத்தனை கால்கள்? எத்தனை தலை? எத்தனை வயிரோ அத்தனை அத்தனை கைகள் கண்கள் கால்கள் தலை வயிறு முதலிய உறுப்புகளே காணப்படுகிறபடியால் யாதொரு பேதமும் காணப்படுவதில்லை தவிரவும் ஒரு தகப்பன் மக்களில் எந்தப் பிள்ளைக்குத்தான் தகப்பனது அபிமானம் உண்டு, எந்தப் பிள்ளைக்குத்தான் தகப்பனது அபிமானம் இல்லையென்று சொல்லமுடியாதோ அப்படியே எல்லோரிடத்திலும் வகுப்புப் பேதமற ஒரு தன்மையான மனிதப்படைப்பென்பதும் யுக்தியினுலும் நிரூபிக்கப்பட்டது.

இனி அனுபவமென்பது என்னவென்பதை கவனிக்குமிடத்து பழக்க வழக்கங்களால் தொன்றுதொட்டு வருகிறதை அனுபவம் என்று சொன்னேம். அப்படிப்பட்ட அனுபவத்திலாவது வித்தியாசமுண்டோவென்ருல், ஒருபோதும் காணப்படவில்லை. உதாரணமாக நம்முடைய பாரத நாட்டிலே யாரையாரை உயர்ந்தோரெனப் படுகிறதோ அவர்களுடைய மூல புருஷர்கள் யார் என்பதை சற்று நடு நிலைமையில் நின்று யோசித்துப்பார்த்தால், மாண்டவ்யர் பாராசார், வசிட்டர், கொண்டின்யர், கார்க்கியா விசுவாமித்திரர் முதலியவர்களை எந்தெந்தஜாதியிற் பிறந்தார்கள் என்பதும் அத்தகையோர்களுக்குப் பிறந்ததால் தங்களுக்கு அவர்களது பெயரை முன்னிட்ட கோத்திரமென்று நாளைக்கும் அனுபவத்தில் வழங்கிவருவதாலும் நம் கண்ணுக்கு முன்பாக எத்தனையோ பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாரின் ஓட்டல்களிலும் வீட்டுகளிலும் ஆங்கில ஓட்டல்களிலும் மகம்மதியர் ஓட்டல்களிலும் கடற்பிரயாணங்களிலும் நான்கு பெரிய உத்தியோக மனிதர்கள் ஒன்று கூடி உண்டாட்டு விழாநடக்கும் சமயங்களில் யார் யென்ன பதார்த்தங்களைக் கொண்டுவந்து விளம்புகிறார்கள் என்பதையும் அவைகள் எப்படிப் புசிக்கப்படுகிறதென்பதையும் நேரில் பார்ப்பவர்களுக்கு நன்ருகத் தெரியுமாகையால் அதைப்பற்றி அதிகம் எழுதத் தேவையிராதெனவே விடுத்தனம். தவிர ஜாதிப்பான்மைப்படி ஒருவர் தொடக்கூடாதென்ருவது பார்க்கக்கூடாதென்ருவது இருப்பது தொன்றுதொட்டு வழக்கத்திலிருக்கிறவைகள்தான் என்ருல் நமது இந்தியாவில் வடநாடுகளில் யார் சமைத்து வைத்திருப்பதை யார் வாங்கி உபயோகப்படுத்திவருகிருர்கள் என்பதையாவது கவனித்துப் பார்த்தால்விளங்காமல்போகாது. இந்தியாவின் நான்கிலோ ஐந்திலோ ஒருபாகம் கொண்ட இத்தென்னிந்தியாவில் அதிலும்தமிழ்நாட்டில் மட்டில் இத்தகைய அநீதியால் உயர்வு தாழ்வுகளை கற்பித்துக்கொண்டு நடப்பவர்களுக்குதானு கடவுள் வழிகாட்டுவார்? இப்பூமண்டலத்தில் வேறு எந்த விடத்திலாவது இத்தகைய அநீதிகள் உண்டா? அவ்விடத்திலுத் பவித்தவர்களை கடவுள் அங்கீகரிக்கிறதில்லையா? வென்னும் விஷயங்களை ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொருவருக்கும் ஜாதிப்பான்மையென்பது யாருடைய உயர்வுக்கு என்பதும் யாருடைய நலத்துக்கு என்பதும் விளங்காமற்போகாது. ஆகையால் நாமெல்லோரும் உண்மையான தேசாபிமானிகள்என்றுசொல்லப்படவேண்டுமானுல் உண்மைக்கொள்கைகளையே கடைப்பிடித்து அதற்குத் தக்கபடி போலிக் கொள்கைகளுக்கு இடந்தராது வாழவேண்டுமென்பதேதான் இதன் முடிவே ஒழிய, மற்றபடி இதற்கு விரோதிகள் நினைக்கிறபடி பெருமையாலோ துவேஷத்தாலோ இதை வெளியிட்டதாக கருதற்பாலதன்று. இதைப்பற்றி இன்னொரு சமயம் விளக்கிக் காட்டப்படும்.

ஓர் வைணவன்.

மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆரூட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.

ஜோதி சாஸ்திரம்

உபாத்தியாயரின்றி 30 நாளையில் ஜோதிஷம் கற்கலாம். எல்லா ஜாதகங்களுக்கும் பலன்கள் சொல்லக்கூடும். பஞ்சாங்கமின்றிஎந்த ஜாதகமும் கணிக்கலாம். விலை ரூபாய் ஒன்று

மு. வடிவேல் செட்டி,
110, ஈஸ்பரன் தர்மாராஜா கோவில் வீதி
புதுச்சேரி.

புத்தக விளம்பரம்.

திகம்பர சாமியார் பால்ய லீலை	அணு	12
தமிழ் வியாசங்கள்	,,	9
ராம்மோகனன் & கெங்காதரன்	,,	7
ஹம்ஸதேவி & ஸன்புத்தி பிரகாசிகை	,,	4

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

சேலம் மாம்பழம்.

தினசரி நிலவரத்திற்கு முதல்தரமாக பொருக்கி எடுத்தனுப்புகிறேன். முதல்தரம் குறிப்பிட்ட ஸ்டேஷனுக்கு பாக்கிங் அண்டு ரெயில்சார்ஜ் சேர்ந்து 100 க்கு ரூ. 7. 2-ம் தரம் 100 க்கு ரூ. 5. ஒட்டுமாங்கன்று சீமை காய்கறி புஷ்பவிதைகளுடைய 1927ஷு புதிய கேட்லாக் இனும்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரிதோட்டம் சேலம்.

சேலம்
நார்பட்டுப் புடவைகள்

சாயம் கெட்டி! **விலை சரசம்!!**

நமது சொந்த தரிகளால் தயார் செய்யப்பட்ட அழகிய பளபளப்பான கண்களைக்கவரும் பல கலர்களில், பிளேன்களிலும், கறைகளிலும் பேட்டுவைத்தும், உடலில் பவளக்கொடி, தந்திகம்பிகளிலும் தயார் செய்யப்பட்ட 2½ முழம் அகலமும் 18 முழம் நீளமுமுள்ள பலகலர்களில் சேலைகளும், 2½ முழம் அகலம் 12முழம் 14முழம் சேலைகளும், 30 அல்லது 33 இன்ச் அகலம் 9 கெஜம் நீளம் பல கலர்களில் பல ரகங்களில் பாவாடைகளும், 7½ கெஜம் நீளம் 1 கெஜம் அகலமுள்ள பலவித சித்தாடைகளும், ஜாக்கட், சர்ட், ரவிக்கை ரகங்களும், பட்டு வேஞ்சி 5 முழம் முதல் 6 முழம் வரையிலும், சாதா பிளேன், சன்னகம்பி வைத்தும் காசகஷி பேட்டு வைத்தும், இன்னும் நார் பட்டுகளில் சம்பந்தமான அநேக ரகங்களும் கோகர்ஜான் புடவைகளும் தயார்செய்கிறேம். நூல் ரகங்களிலும் தயார் ஆகிறது. தேவைக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிவிலை விபரம் தெரிந்து கொள்ளலாம்.

(மேடல் சர்டிபிகேட் பெற்ற)
K. R. Chinnasamy Chetty.
Sidda Chetty & Co.
Artificial Silk Cloth Merchant, Gogai Salem. (S. India)

இலவம் பஞ்சிற்றுயில்.

மெத்தைக்கு இலவம் (சில்க்) பஞ்சு வெளியூர்களுக்கு குறித்த காலத்தில் அனுப்ப முடியும். மொத்தமாய் வாங்கினால் விலை சரசம்.

சி. சுப்பைய முதலியார்
மண்டி
கோயமுத்தூர்.

சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல், வயிற்றுவலி, சதை வளர்ச்சி, முதலியவற்றைத் தீர்க்கும், அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனும். விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு.

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புரம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனாஇனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

அறிவிப்பு.

நமது சந்தா நேயர்கள் தங்களுக்குப் பத்திரிகை சரிவர கிடைப்பதில்லையென்று அடிக்கடி நமக்கு கடிதம் எழுதிவருகிறார்கள். ஆனால் நாம் அவைகளைக் கவனிக்குங்காலத்தில் அன்னார்களுக்குப் பத்திரிகை கிரமமாகத்தான் அனுப்பப்பட்டு வருகின்றன. நாங்களும் ஆபீசில் ஒரு தடவைக்கு மூன்று தடவை விலாசங்களை கணக்கிட்டு சரி பார்த்து அனுப்பிவருகிறோம். ஒருகால் மேற்படி சந்தா நேயர்களின் பத்திரிகைகளை அன்னார்களின் சிநேகிதர்களோ மற்றும் பந்துக்களோ பெற்றுக்கொண்டுதிருப்பிக்கொடுக்காமலிருக்கலாமோவெனச் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. சந்தா நேயர்கள்தயவுசெய்து இனிமேல்எங்களுக்குக் கடிதம் எழுதினாலும், சந்தாத் தொகையை மணியாடர் மூலம் அனுப்பினாலும் முழு விலாசத்தை விபரமாய் எழுதுவதுடன் சந்தா நெம்பரையும் குறித்தெழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர், "குடி அரசு" ஆபீஸ்.

திருப்பூர் கத்தர் பனியன்கள்.

கைராட்டின நூலினாலேயே தயார் செய்யப்பட்டது

விலை நயமானது — சரக்குமேலானது

Trade Mark



28 இஞ்சு டஜன்1க்கு		7—14—0
30 „		8—4—0
32 இஞ்சு டஜன் 1க்கு		8—10—0
34 „		9—0—0

Registeder.

உங்களுக்கு வேண்டியசுத்தக்கதர் பனியன்களுக்கு எங்களுக்கே ஆர்டர் செய்யுங்கள். ஒவ்வொரு பனியன்களிலும் கைராட்டினம் அடையாளம் இருக்கிறதா வென்று கவனித்து வாங்கவும்.

M. V. சுருப்பண்ண செட்டியார்,
கத்தர் பனியன் வொர்க்ஸ், திருப்பூர். (தென் இந்தியா)

தாய்மார்கள் கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருகிறது. 20 வருடத்து அனுபவம், எம்மதஸ்தாரும் வாங்கலாம், அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபால் செலவன்றி ரூ. 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—காத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகித்சை செய்யப்படும்.

விலாசம்:— எ. எஸ். எ. மாந்திரீக டாக்டர்
இனுமந்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலாகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி திணுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக திணுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

பெட்ரோமாக்ஸ் லைட்.

லேட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்களும் விலைநயமாய் கிடைக்கும். கேடலாக் இனும்.

லன் கம்பெனி, தஞ்சாவூர்.

நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறிந்த காலத்தில் செய்துதரப்படும்.

மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிறு திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதராஸ் தென்னிந்தியா
மோட்டாஇன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதராஸ்.

மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு.

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு. (S. I.)

வ்கௌட்வ் கேமரா.



சமீபத்தில் லண்டனில் கண்டு பிடிக்கப்பட்டது. இதைக் கொண்டு சிறு குழந்தைகள் கூட புகைப்படமெடுத்து மாதம் 50 முதல் ரூ. 1,000 வரை சம்பாதிக்கலாம். அதன் ரஹஸ்ய முறைகள் கேமரா வாங்குபவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

இதன் விலை செட் 1-க்கு ரு. 3—8—0.

கிடைக்குமிடம்:—

Hart & Co.,
Importers, Coimbatore, (S. I.)

சர்வமேக சம்ஹாரி.

சகல வெள்ளை, வெட்டை, நீர்கடுப்பு, தடிப்பு, முதலிய மேகம் இருபத்தொன்றையும் ஒரு வாரத்தில் குணப்படுத்தும். ஒரு வார மருந்து விலை ரூ 2. வி. பி. வேறு கேட்லாக் இனும்.

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு. (S. I.)

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.